சுபீட்சம்
SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com
செவ்வாய்க்கிழமை 05.12.2023 supeedsam.com supeedsam@gmail.com



# தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு முன்மொழியப்பட்ட இரு பெயர்கள்

## இறுதி தீர்மானம் அடுத்த ஆண்டு

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைமைத்துவத்திற்கு இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தேசிய மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெறவுள்ளது.

இதன்போது கட்சியின் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார் என கட்சியின் உள்ளக வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் தேர்தல்களில் சிறு கட்சிகளின் ஆதரவில் ஆட்சி அமைப்பதற்கும், ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கும் தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கைகள் பிரதான காரணியாக அமையும் என அரசியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழரசு கட்சியின் தலைமைப் பதவி

## சிறீதரன் எம்.பிக்கு பெருகும் ஆதரவு?



இலங்கை தமிழரசு கட்சியின் அடுத்த தலைமைத்துவத்திற்கான விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுக்கு வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக கட்சியின் உள்ளக தகவல்களை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழரசு கட்சியின் புதிய தலைவரை நியமிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோர் அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# மாவீரர் நாள் அனுஷ்டித்தமைக்கு எதிராக அநாமதேய அழைப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் மாவீரர் தின நிகழ்வுகளில் பங்கேற்ற மாணவர்களையும் அதற்கு அனுமதி வழங்கிய பீடாதிபதிகளையும் தண்டிக்க வலியுறுத்தி திடீரென முளைத்த கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற அநாமதேய அமைப்பு எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை ஏ9 வீதியை மறித்துக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# சிறுவன் கொலை செய்யப்பட்டது உறுதி : சவப்பெட்டியுடன் ஆர்ப்பாட்டத்தில் குதித்த பொதுமக்கள்

(க.சரவணன்)

சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் பிரேதப்பெட்டியுடன் நேற்று கொக்குவில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கொக்குவில் பொலிஸ் நிலையத்திற்கு பிரேதப்பெட்டியுடன் ஊர்வலமாகவந்த பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த மாதம் 17ஆம் திகதி ஆயலம் ஒன்றில் திருடிய

02 ஆம் பக்கத்தில்...



# சிறுவன் மர்ம மரணம்: மேற்பார்வையாளரான பெண்ணிற்கு 14 நாட்கள் விளக்கமறியல்



(பாறூக்ஷிஹான், க.சரவணன்)

உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக

02 ஆம் பக்கத்தில்...

# போதகருக்கு ஒரு சட்டம் தேரருக்கு ஒரு சட்டமா?

## சாணக்கியன் சபையில் தெரிவிப்பு!



பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது. அண்மையில் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் Ministry of Trade Commerce மற்றும் Ministry of Primary Industries தொடர்பில். உளுந்து, கௌபி போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு தடை உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

02 ஆம் பக்கத்தில்...

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598
25605: cicero

# அம்பாறை மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது வழங்கல்விழா!

( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது வழங்கல் விழா

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் தலைமையில் (2) சனிக்கிழமை காரைதீவு சுவாமி விபுலானந்தா ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

திருமுன்னிலை அதிதியாக மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜி மகராஜ் கலந்து கொண்டு ஆசீர்வாதம் வழங்கினார்.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து சிறப்பித்தார். அவர் தமிழிலே உரையாற்றி அனைவரையும் கவர்ந்தார்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.எம். ஹனீபா,அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் ஷாபிர் சிறப்பு அதிதிகளாக திருக்கோவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சோ. ஸூரநுதன், சம்மாந்துறை உதவி கல்விப் பணிப்பாளர்களான பூ. பரமதயாளன்,.வி.ரி. சகாதேவராஜா, ஆசிரியர் சி. சிவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.



அம்பாரை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ் விழா ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

மேலும் அம்பாறை மாவட்ட இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேலும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் 121 இந்து சமய அறநெறி பாடசாலைகள் உள்ளன. அங்கு 9842 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 575ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த போட்டிக்கு 296 மாணவர்கள் நேற்று முன்தினம் பரிசுகளை பெற்றுக் கொண்டார்கள். சிறந்த 16 ஆசிரியர்கள் 10 சிறந்த பாடசாலைகளுக்கும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.





## போதகருக்கு ஒரு சட்டம் தேரருக்கு ஒரு சட்டமா?

இந்த தடையினால் உளுந்து தற்போது 1Kg ரூபா 1,600 ஆக சந்தைப்படுத்தல் விலையாக உள்ளது. ஆனால் இதனை இறக்குமதி செய்வதாக இருந்தால் வரி அனைத்தும் சேர்க்கப்பட்டு இந்த விற்பனை விலையை ரூபா 600.00 ஆக மாற்ற முடியும்.

கூடுதலாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களே அதிகம் உளுந்தினை பயன்படுத்துகின்றனர். இந்த விலையினை குறைப்பதற்கு விவசாய அமைச்சர் உளுந்து, கௌபி இறக்குமதி செய்ய 17 பேருடைய பெயரைக் கொண்டதான ஒரு அனுமதியை வழங்கியுள்ளார். இறக்குமதியை அனுமதிக்கும் போது இவற்றின் விலையினைக் குறைக்க முடியும். ஆனால் இன்னும் அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. குறிப்பிட்ட ஒரு வாரத்தினுள் அனுமதி வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி – ஜூலை மாதம் வரை இலங்கைக்கு தேவையான சீனி கடந்த வருடத்தை 60% அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதற்கான காரணம் நவம்பர் மாதம் சீனிக்கான வரிச் சலுகை நீக்கப்படுகின்றது என்பதனை அறிந்ததனால் ஆகும். ஊழல் மோசடிகள் நடைபெறுகின்றன. இதனால் இலங்கைக்கு 2 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுகின்றது. திருகோணமலை புல்மோட்டை, வாகரை மற்றும் திருக்கோவில் பிரதேசங்களில் மக்களின் விருப்பத்தினை மீறி கனியவள அகழ்வினை மேற்கொள்கின்றனர்.

வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும் எனக் கூறினாலும் உண்மையில் பிரதேச வளங்களை சூறையாடி அவ் இடங்களை பாலைவனங்களாக மாற்றும் நடவடிக்கையாகவே இவை அமைகின்றன. இது தொடர்பில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அதற்கு அமைச்சர் தனக்கு இதனைப் பற்றி எதுவும் தெரியாது எனவும், அவ்வாறு ஏதும் அறிந்தால் அதனை தனக்கு தெரியப்படுத்தும் படியும் கூறினார். இராஜாங்க அமைச்சர் வியாலேந்திரன் காகிதங்களை இறக்குமதி செய்ய வேண்டும் என கூறினார். அவருடைய பிரதேசமான வாழைச்சேனையில் காகித தொழிற்சாலை உள்ளது. அதனை முறையாக செயற்படுத்தி காகிதங்களை இலங்கையிலேயே உற்பத்தி செய்ய முடியும். ஆனால் அதனை மேற்கொள்ளாது காகித இறக்குமதி தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிப்பதென்பது பயனற்றது.

அண்மையில் கைதான போதகர் ஜெரோம் பெர்ணான்டோ ICCPR சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 13 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த ICCPR சட்டம் சிறுபான்மை தமிழ் பேசும் மக்களுக்கும், எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களுக்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது. அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் அவர்கள் தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன் என்பதற்கு ஏன் இன்னும் அவரை கைது செய்யவில்லை? போதகருக்கு ஒரு சட்டம் தேரருக்கு ஒரு சட்டமா? என தெரிவித்தார்.

## மாவீரர் நாள் அனுஷ்டித்தமைக்கு

இதற்கான முன்னறிவித்தல் இன்றிரவு கிளிநொச்சி வளாகத்தினுள் அடங்கும் சகல பீடங்களினது பீடாதிபதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளையும், மறுநாள் 27 ஆம் திகதி அந்த அமைப்பிலிருந்து உயிர்நீத்தவர்களின் நினைவு தினத்தை கடைப்பிடித்தமையும் கிளிநொச்சி வளாகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதோடு இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என சிங்கள மாணவர்கள் சிலர் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு அநாமதேயமாக முறைப்பாடுகளை செய்திருந்தனர்.

இத்தகைய அநமாதேய முறைப்பாடுகள் பல வெவ்வேறு பெயர்களில் அனுப்பப்பட்டதன் பின்னணியில் கிளிநொச்சி வளாக விரிவுரையாளர் ஒருவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதுவரை இயங்காத – பதிவு செய்யப்படாத கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் பீடாதிபதிகளுக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்திலேயே மாவீரர் நாள் நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவர்களையும் அந்த நிகழ்வுக்கு அனுமதி வழங்கியதாகக் கூறப்படும் விவசாய பீடாதிபதியையும் உரிய விசாரணைகள் முடிவுறும் வரையும் உள்நுழைவுத் தடை விதித்து, இடைநிறுத்தி வைக்குமாறும் இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் இத்தகைய நிகழ்வுகளை கண்டும் காணாமல் இருந்த பொறியியல் பீட பீடாதிபதி, தொழில்நுட்ப பீட பீடாதிபதி ஆகியோரையும் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தியும் மேலும் சில விடயங்களை முன்வைத்தும் எதிர்வரும் 7ஆம் திகதி ஏ9 வீதியை முடக்கி போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அந்தக் கடித்த்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நாளை 5ஆம் திகதிக்குள் நிகழ்வுகளில் ஈடுபட்ட மாணவர்களையும், விவசாய பீடாதிபதியையும் உள்நுழைவுத் தடை மூலம் இடைநிறுத்தி விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் நாளை மறுதினம் 6ஆம் திகதிக்குள் தமக்குச் சாதகமான பதில் வழங்காதுவிடின் கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன் நீதிமன்ற கட்டளையை ஒன்றைப் பெற்று ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டு 7ஆம் திகதி திட்டமிட்டபடி போராட்டத்தை முன்னெடுப்போம் என்றும் அந்த அநாமதேய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் – அறிவியல் நகரில் அமைந்துள்ள கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மற்றும் பயங்கரவாத்த்தை மீளுருவாக்கம் செய்யும் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் தாம் கலந்துரையாடி இருப்பதாகவும், வழக்குகளில் முன்னிலையாகி தமக்குத் தேவையான சட்ட ஒத்துழைப்பை வழங்குவதற்குச் சட்டத்தரணிகள் சம்மதித்திருப்பதாகவும், கொழும்பு உட்பட இலங்கையின் ஏனைய நகரங்களில் இது தொடர்பில் கண்டண ஆர்ப்பாட்டங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவது குறித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்கங்களின் சம்மேளனத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவன் மர்ம மரணம்; மேற்பார்வையாளரான பெண்ணிற்கு...

பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் மரணமடைந்த சிறுவனின் தந்தை ஆஜராகி இருந்ததுடன் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணிகளின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 28 வயதுடைய குறித்த பாடசாலையின் மேற்பார்வையாளரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### செய்திப் பின்னணி

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியிலுள்ள பெண்கள் சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் கடந்த மாதம் 17ஆம் திகதி மணி ஒன்றை களவு செய்ததாக குற்றச்சாட்டின் பெயரில் கொக்குவில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட பின்னர் நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் நீதிவானின் உத்தரவின் பிரகாரம் குறித்த காப்பகத்தில் பாதுகாப்பிற்காக தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மர்மமான முறையில் மரணம் அடைந்தவர் மட்டக்களப்பு கொக்குவில் பகுதியை சேர்ந்த ஆனந்ததீபன் தர்சான்ந் எனும் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சிறுவனின் மர்ம மரணம் தொடர்பில் கடந்த புதன்கிழமை (29.112023)அதிகாலை 3.30 மணி அளவில் உயிரிழந்து உள்ளதாக தமக்கு அறிவிக்கப்பட்டதாகவும் சிறுவனின் உடலில் காயத் தழும்புகள் இருப்பதனால் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பெற்றோர் தெரிவித்ததை அடுத்து கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையில் வைக்கப்பட்ட சிறுவனின் சடலம் அம்பாறை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.அங்கு சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம் குறித்த மரணம் அடி காயங்கள் காணப்படுவதாகவும் உட்காயங்களினால் மரணம் சம்பவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான எம்.எல் றபீக் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஜனகீதன் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் குறித்த பாடசாலைக்கு சென்று தொடர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் குறித்த சிறுவனை அன்று தாக்கியதாக சந்தேகத்தின் பெயரில் 25 வயது மதிக்கத்தக்க அப்பாடசாலையில் கடமையாற்றும் மேற்பார்வையாளரான பெண் கைது செய்யப்பட்டார்.இவ்வாறு கைதான சந்தேக நபர் சனிக்கிழமை(2) இரவு கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இந்நிலையில் குறித்த சிறுவன் தங்க வைக்கப்பட்டிருந்த காப்பகத்தில் சம்பவ தினமான இரவு உணவினை உட்கொண்ட பின்னர் பாடசாலை வளாகத்தில் நின்றதாகவும் பின்னர் என்ன நடந்தது என தெரியவில்லை என முன்னுக்கு பின்னான வாக்குமூலங்கங்கள் வழங்கியதை தொடர்ந்தே சந்தேகத்தின் பேரில் பாடசாலை மேற்பார்வையாளரான அப்பெண் பொலிஸ் விசாரணைக்காக கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் சனிக்கிழமை(2) இரவு கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தனது மகனின் மரணத்தில் பலவிதமான பொய் குற்றச்சாட்டுகளையும் பாடசாலையின் நிர்வாகம் முன் வைப்பதாகவும் மிகவும் வறுமை கோட்டின் கீழ் வாழும் நாங்கள் எமது பிள்ளைக்கு நடந்த இதே போன்ற சம்பவங்கள் யாருக்கும் இடம் பெறக் கூடாது என்றும் பிள்ளையின் மரணத்தில் ஒரு நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் மரணம் அடைந்தவரின் தந்தை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவன் கொலை செய்யப்பட்டது உறுதி ;

குற்றச்சாட்டின் பெயரில் மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த சிறுவன், நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியிலுள்ள சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் பாதுகாப்பிற்காக தங்க வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த சிறுவன் கடந்த புதன்கிழமை (29.112023) அதிகாலை 3.30 அளவில் உயிரிழந்திருந்த நிலையில் சிறுவன் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளமை உடற்கூற்று பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் பணியாற்றிய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பின்னணியில் சிறுவன் கைது தொடர்பில் கொக்குவில் பொலிஸார் முறையற்ற வகையில் செயற்பட்டுள்ளதாக தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சிறுவனுக்கு பாதுகாப்பு வழங்கப்படாததன் காரணமாக அவரது உயிரிழப்பிற்கு பொலிஸாரே காரணம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

விளக்கு, மணி, சாம்பிராணி தட்டை திருடியதாகக் கைது செய்யப்பட்ட சிறுவன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகம் எழுந்துள்ளது.

16/11/2023 – விளக்கு, மணி, சாம்பிராணி தட்டு ஒன்றை திருடியதாகக் கூறி 14 வயதுடைய தர்ஷாந்த் என்கிற சிறுவனை சந்தேகத்தின்பேரில் மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள்.

17/11/2023 – நீதிமன்றத்தில் மறுநாள் ஆஜர்ப்படுத்தியதைத் தொடர்ந்து சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் இந்த சிறுவனை அனுமதிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

29/11/2023 – சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் இருந்த சிறுவன் உயிரிழந்துவிட்டதாக பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அம்பாறை பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டப் பிரேதப் பரிசோதனையில் சிறுவனின் உடலில் காயங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தனது மகன் கொலை செய்யப்பட்டிருப்பதாக சிறுவனின் தந்தை கூறுகிறார்.

## தமிழரசு கட்சியின் தலைமைப் பதவி சிறீதரன் எம்.பிக்கு பெருகும் ஆதரவு?

இந்நிலையில், தமிரசு கட்சியின் புதிய தலைவரை தெரிவு செய்யும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோர் விண்ணப்பங்களை கையளித்துள்ளனர்.

கட்சியின் 6 இற்கும் மேற்பட்ட வழமையான உறுப்பினர்களின் ஒப்புதலுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவுகள் உறுதியாக இருக்க வேண்டும் என்றும் கட்சியின் செயலாளர் பி.சத்தியலிங்கம் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை சமர்பித்துள்ளவர்களில் சுமந்திரன் கொழும்பைச் சேர்ந்தவர் என்பதுடன், பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே, சுமந்திரன் எம்.பியை விட சிறிதரன் எம்.பிக்கு வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதாக கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக தமிழரசு கட்சியில் இருந்து சுமந்திரன் எம்.பிக்கு ஆதரவு காணப்படுகின்ற போதிலும், கூட்டமைப்பு என்று வருகின்ற போது சிறிதரன் எம்.பிக்கு ஆதரவு வலுவாக காணப்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வழமையாக தமிழரசு கட்சியின் தலைவர் தெரிவு என்பது கட்சியின் மத்திய சபையாலேயே தீர்மானிக்கப்படும்.

எனினும், இம்முறை மத்தியசபையில் பரிந்துரை செய்யப்படும் வேட்பாளர்கள் பொதுச்சபையின் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

கட்சியின் பொதுச் சபையில் 200க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கட்சியின் மத்திய சபையில் சுமந்திரனுக்கும், பொதுச் சபையில் சிறிதரன் எம்.பிக்கும் ஆதரவு வலுவாக காணப்படுவதாக கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இராஜதந்திர மட்டத்தில் சுமந்திரன் எம்.பிக்கு ஆதரவு காணப்படுவதாக கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் ஆதரவு சிறிதரன் எம்.பிக்கே காணப்படுவதாக கூட்டமைப்பின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையிலேயே, தமிழரசு கட்சியின் தலைவர் தெரிவில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னரே தலைவர் தெரிவு குறித்து முடிவெடுக்கப்படும் என தமிழரசு கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், வரவு செலவுத் திட்டத்தின் போது கூட்டமைப்பினர் நடுநிலை வகிக்க முடிவெடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

# நீர்கொழும்பு போரத்தோட்டை அல் இஹ்லாஸ் சர்வதேச முன்பள்ளி பாடசாலையின் 24 வது வருடாந்த சிறுவர் விளையாட்டு போட்டி











**(சில்மியா யூசுப்)**

நீர்கொழும்பு போரத்தோட்டை அல் இஹ்லாஸ் சர்வதேச முன்பள்ளி பாடசாலையின் 24வது வருடாந்த சிறுவர் விளையாட்டு போட்டி நீர்கொழும்பு அல்பலாஹ் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது

பாடசாலை அதிபர் ஷரீனா ஹசீம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இவ் விளையாட்டு போட்டி நிகழ்வில் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஸக்காஉல்லாஹ், முன்னாள் மாநகர சபை நஸ்மிஹார், முனவ்வர் ஆசிரியர், சட்டத்தரணி பஸீர், அல்பலாஹ் கல்லூரியின் உப அதிபர் சதீஸ் கான், ஹம்தா ப்ரடக்ட் உரிமையாளர் நௌபர், ஸ்கை மார்க்கட் உரிமையாளர் பரூஸ் ஆகியோர்கள் பிரதம அதிதிகளாகவும் , ஊடகவியலாளர் சில்மியா யூசுப் , அல் பலாஹ் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களான ஹசீம், முஹம்மட் ரிஸ்லி,முஹம்மட் நவ்பர்,கௌஸ், உட்பட பாடசாலையின் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதேவேளை மாணவர்களின் மைதான நிகழ்ச்சிகளும்,வினோத உடை போட்டிகளும் சிறப்பாக இடம்பெற்றதுடன் 1999 ஆம் ஆண்டு ஏழு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தற்போது ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# சாய்ந்தமருது இளம் வர்த்தக பிரமுகர்கள் இருவருக்கு இந்தியாவில் சிறந்த வர்த்தக முகாமைக்கான ஆசிய விருது






**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இந்தியா,தமிழ்நாடு,திருச்சி பிரீஸ் ரெசிடென்சியில் இடம்பெற்ற சிறந்த வர்த்தக முகாமைத்துவ பணிப்பாளர்களுக்கான ஆசிய விருதினை இலங்கை,சாய்ந்தமருதைச் சேர்ந்த இரண்டு வர்த்தக பிரமுகர்கள் பெற்றுள்ளனர்.

சாய்ந்தமருதை சேர்ந்த அப்துல் அஸீஸ் அஸ்றப் அலி மற்றும் அப்துல் கரீம் முஹம்மட் ஜலீல் ஆகிய இளம் வர்த்தக பிரமுகர்களுக்கு Asia Best Marketing Businessman of the year 2023 award கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# திருவாசக மாநாடு 2023 15 ம் திகதி முதல் ஆரம்பிக்கிறது!




**(நூருல் ஹுதா உமர் )**

அம்பாரை மாவட்டம் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் எற்பாட்டில் எதிர்வரும் 2023.12.15 வெள்ளி முதல் 2023.12.17 ஞாயிறு வரை தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கலை அரங்கில் கலாபூசணம் தம்பிமுத்து மகேந்திரா அவர்களின் தலைமையில் திருவாசக மாநாடு இடம்பெறவுள்ளது. இது சம்பந்தமான ஊடகவியலாளர் சந்திப்பு (02) மாலை இடம்பெற்றது.

இங்கு கருத்து வெளியிட்ட ஏற்பாட்டு குழுவினர், சமய சமூக ஆன்மிக இறை ஆசி கிடைக்க வேண்டும் எனும் நோக்குடன் இந்தியாவில் இருந்து சூரியநார் கோவில் ஆதின தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமிகளின் வருகையை ஒட்டி இந்து ஸ்வயம் சேவக சங்கமும் ஆலயங்களும் மற்றும் இந்து சமய அமைப்புக்களும் இணைந்து நடாத்தும் திருவாசக மாநாட்டிற்கு அனைவரும் கலந்து இறை அருள் பெறுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

மேலும் 1ம் நாள் நிகழ்வாக எதிர்வரும் 2023.12.15 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிவரை “மணிவாசகப் பெருமானும் திருவாசகமும்” எனும் தலைப்பில் செயல் அமர்வு நடைபெறவுள்ளதுடன் 2ம் நாள் நிகழ்வாக 2023.12.16 சனிக்கிழமை அன்று காலை 08.00 மணிமுதல் பிற்பகல் 12.00 மணிவரை “திருவாசகம் ஓதுதலும் பொருள் கூறலும்” எனும் தலைப்பிலான செயலமர்வு நடைபெற உள்ளதுடன் 3ம் நாள் நிகழ்வுகள் 2023.12.17 ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 8.30 ஆரம்பித்து பிற்பகல் 2.00 மணிவரை நிறைவுபெறவுள்ளதாக தெரிவித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமியின் அருளுரை, மாநாட்டின் திருவாசக நூல் வெளியீடு, மாநாட்டின் நிறைவை தொடர்ந்து உருத்திராட்சம் அணிவித்து தீட்சை வழங்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் சர்வதேச மாற்றுதிறனாளிகள் தினம்






**(ஹஸ்பர் )**

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளரின் தலைமையில் சர்வதேச மாற்றுதிறனாளிகள் தினம் திருகோணமலை மாவட்ட செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமான ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற குறித்த மாவட்ட பிரதான நிகழ்வு இதுவாகும். இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள மாற்றுதிறனாளிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது

இந் நிகழ்வில் இலங்கை அணி சார்பாக சக்கர நாற்காலி கடினப் பந்து போட்டியில் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்திய தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்த டபிள்யூ.பிரியந்த குமார என்பவர் மாவட்ட செயலாளரினால் கௌரவப்படுத்தப்பட்டதுடன் மாற்றுதிறனாளிகளுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டது. மற்றும் இந் நிகழ்வில் கலந்து கொண்ட மாற்றுதிறனாளிகள் அனைவருக்கும் சிறிய அன்பளிப்பு ஒன்றும் வழங்கப்பட்டது .இதன் போது பல திறமைகளை கொண்ட மாற்று திறனாளிகளின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி கலந்து சிறப்பித்ததுடன் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் (காணி ) நிர்வாக உத்தியோகத்தர்,குருகுலசூரிய, பிரதம முகாமைத்துவ உதவியாளர், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் த. பிரணவன் மற்றும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாணத்தில் 712 மாணவர்களுக்கு 9 ஏ சித்தி!

## மட்டக்களப்பு வலயம் முன்னணியில்

**( வி.ரி. சகாதேவராஜா)**

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர (சாதாரண) தரப் பரீட்சையில் -2022 (2023) கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களில் அதிகூடிய சித்திவீதத்தைப் பெற்று மட்டக்களப்பு வலயம் முதலிடத்தை பிடித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 26,874 மாணவர்கள் குறித்த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றினர்.

அவர்களில் 712 மாணவர்கள் 9 பாடங்களிலும் A சித்தி அடைந்துள்ளனர். மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 136 மாணவர்களும், கல்முனை கல்வி வலயத்தில் 122 மாணவர்களும், மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தில் 112 மாணவர்களும் என ஆகக் கூடிய எண்ணிக்கையில் 9A சித்தி பெற்றுள்ளனர் .

மாணவர்கள் பெற்றுள்ள சித்திகளின் அடிப்படையில் மட்டக்களப்பு கல்வி வலயம் முதலாமிடத்தில் உள்ளது. இரண்டாவது இடத்தில் கல்முனை வலயமும் மூன்றாவது இடத்தில் மகா ஓயா வலயமும் வந்துள்ளது. அக்கரைப்பற்று, மட்டக்களப்பு மத்தி, திருக்கோவில், அம்பாறை, மூதூர், மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு ஆகிய கல்வி வலயங்கள் முறையே நான்கு முதல் பத்து வரையான இடங்களுக்குள் வந்துள்ளது. 11 வது இடத்தில் சம்மாந்துறை வலயம் வந்துள்ளது. ஏனைய ஆறு வலயங்களான தெஹியத்தகண்டிய திருகோணமலை திருகோணமலை மேற்கு கல்குடா கந்தளாய் கிண்ணியா ஆகிய வலயங்கள் பின்னணியில் உள்ளன.

G.C.E(O/L) 2022 Eastern Province

| Zone | Sat | 3C3S | % | 3C2S | % | Rank | 9A | 9W | Status |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Batticaloa | 2031 | 1617 | 80% | 1721 | 85% | 1 | 136 | 4 | Above the Province |
| Kalmunai | 2827 | 2066 | 73% | 2274 | 80% | 2 | 122 | 25 | |
| Mahaoya | 739 | 527 | 71% | 589 | 80% | 3 | 11 | 1 | |
| Akkaraipattu | 1918 | 1372 | 72% | 1503 | 78% | 4 | 43 | 14 | |
| Batticaloa Central | 2422 | 1675 | 69% | 1854 | 77% | 5 | 112 | 38 | |
| Thirukkovil | 950 | 636 | 67% | 726 | 76% | 6 | 21 | 5 | |
| Ampara | 2842 | 1959 | 69% | 2153 | 76% | 7 | 79 | 32 | |
| Mutur | 1220 | 795 | 65% | 909 | 75% | 8 | 20 | 28 | |
| Batticaloa West | 929 | 613 | 66% | 690 | 74% | 9 | 3 | 8 | |
| Paddrippu | 1527 | 963 | 63% | 1103 | 72% | 10 | 24 | 13 | Below the Province |
| Sammanthurai | 1480 | 953 | 64% | 1040 | 70% | 11 | 23 | 31 | |
| Dehiattakandiya | 999 | 580 | 58% | 687 | 69% | 12 | 10 | 7 | |
| Trincomalee | 2275 | 1364 | 60% | 1541 | 68% | 13 | 59 | 50 | |
| Trincomalee North | 383 | 206 | 54% | 253 | 66% | 14 | 2 | 11 | |
| Kalkudah | 1608 | 929 | 58% | 1052 | 65% | 15 | 11 | 14 | |
| Kantalae | 1197 | 659 | 55% | 761 | 64% | 16 | 15 | 38 | |
| Kinniya | 1527 | 815 | 53% | 963 | 63% | 17 | 21 | 54 | |
| Province | 26874 | 17729 | 66% | 19819 | 74% | | 712 | 373 | Province |

# மட்டு சிறையில் தனது கணவர் சக கைதிகளால் அடித்து கோலை நீதிவேண்டும் துரைராஜாவின் மனைவியார் கோரிக்கை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட எனது கணவர் ஏனைய சிறை கைதிகளால் அடித்து கொலை செய்துள்ளனர் எனவே எனது கணவரின் கொலை செய்தவர்கள் இதுவரையம் கைது செய்யப்படவில் எனக்கு நீதிவேண்டும் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக கொலை செய்யப்பட்ட சோமசுந்தரம் துரைராஜாவின் மனைவியார் தெரிவித்தார்



எனது கணவர் கசிப்பு அருந்துவதுடன் மீன் மற்றம் கருவாடு விற்பனை செய்துவருபவர் எனக்கு 3 பிள்ளைகள் இந்த நிலையில் கசிப்பு தொடர்பான வழக்கு ஒன்றில் நீதிமன்றத்தால் கணவன் ஆஜராகாத நிலையில் அவருக்கு நீதிமன்ற பிடிவிறாந்து இருந்துள்ள நிலையில் கடந்த நவம்பர் 22ம் திகதி கைது செய்த கொக்கட்டிச் சோலை பொலிசார் 23ம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தி பிணை எடுக்க நாங்கள் செல்லமுடியாதகாரணத்தால் அவரை பிணை எடுக்க யாரும் இல்லாது விளக்கமறியல் வைத்தனர்.

இந்த நிலையில் 27 ம்திகதி செவ்வாய்க்கிழமை கணவரை சிறைச்சாலையில் பார்வையிடுவதற்கு சமைத்து சோறு எடுது;துக்கொண்டு நானும் எனது மகளும் சென்ற நிலையில் சிறைச்சாலை அதிகாரிகள் சுமார் 30 நிமிடத்தின் பின்னர் உங்களது கணவன் சுகயீனமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது எனது கணவரை பிரோத அறையில் வைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சியுற்றேன் அவர் மீது கால் கை, தலை, நெஞ்சு பகுதியில் அடிக்கப்பட்ட காயம் இருப்பதாகவும் பிரேத பரிசோதனையின் பின்னர் தெரிவிப்பதாக தெரிவித்து பிரேத பரிசோதனையின் பின்னர் 30 ம் திகதி வெள்ளிக்கிழமை சடலத்தை தந்தார்கள் அப்போது பொலிசார் தெரிவித்தனர் எனது கணவன் மீது பொல்லால் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக அவருடன் அந்த சிறைக் கூடத்தில் 8 கைதிகள் இருந்துள்ளனர் அவர்களுக்கு தெரியும் யார் எனது கணவனை அடித்து கொலை செய்தது என கணவருக்கு எந்த வருத்தமும் இல்லை அவர் கசிப்பு அருந்துவது மட்டும் தான் எனவே கணவரை கொலை செய்தவர்களை நீதியின் முன்னர் நிறுத்தவேண்டும்.

சிறையிலேயே பாதுகாப்பு இல்லை ஆகவே கணவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு சிறைச்சாலை காவலர்கள் பொறுப்பு கூறவேண்டும் அவர்களுக்கு எதிரா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளேன் பொலிசார் பக்கசார்பற்ற விசாரணை வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## கீழியன்குடியிருப்பு ஆலய பெருவிழா









(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தின் கீழியன் குடியிருப்பு பங்கின் பாதுகாவலராம் புனித சவேரியாரின் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (03) வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பங்குத் தந்தை அருட்பணி லோறன்ஸ் லியோன் அடிகளாரி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் திருப்பலியானது பேசாலை பங்குத் தந்தை அருட்பணி அன்ரன் அடிகளாரின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இக் கூட்டுத்திருப்பலியில் அருட்பணி எஸ்.ஜெஸ்மன்ராஜ் அடிகளார் , அருட்பணி எஸ்.அருண்தாஸ் குரூஸ் அடிகளார் ஆகபியோர் இணைந்து ஒப்புக் கொடுத்தனர்.

திருப்பலி முடிவில் திருச்வுரூபம் புனிதரின் அசீர்க்காக பவனியாக வெளியில் ஏடுத்துச் செல்லப்பட்டு திருச்சுரூப ஆசீரும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

## மட்டக்களப்பு - கும்புறுமூலை விசேட தேவையுடையவர்கள் தொழில் பயிற்சி நிலையத்தின் உ வது ஆண்டு நிறைவு விழா









(ஏறாவூர் நிருபர் - நாஸர்)

உலக சனத்தொகையில் 15 சதவீதமானவர்கள் மாற்றுத்திறனாளிகளென ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் சிறுவர் நிதியத்தின் இலங்கைகான பணிப்பாளர் அடிடிகோஸ் ( தெரிவித்துள்ளார்.

உலகில் விசேட தேவையுடையவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணருவதற்குப் போதிய சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.

விசேட தேவையுடையவர்கள் தொழில் பயிற்சி பெறுவதற்கென மட்டக்களப்பு - கும்புறுமூலையில் அமைந்துள்ள நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் சிறுவர் நிதியத்தின் ஆசிய பிராந்திய நாடுகளுக்கான பணிப்பாளர் ஹனிகே அவுட்கேர்க் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

விசேட தேவையுடையவர்கள் தொழில் பயிற்சிபெறுவதற்கு வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் மொழிமூலமான முதலாவது நிலையம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர் நிதியம் சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து நாட்டின் பதினொரு மாவட்டங்களில் இத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளது. இங்குள்ள பயிலுநர்களுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் சிறுவர் நிதியம் வழங்கியுள்ளது. அத்துடன் இப்பயிற்சி நிலையத்திற்கு மல்டி மீடியா உபகரணம் ஒன்று இந்நிகழ்வின்போது சம்பிரதாயபூர்வமாக சிறுவர் நிதியத்தினால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறுவர் நிதியத்தின் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தோனேசியா, இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் பிரதிகள் பங்கேற்றனர்.

இங்கு முதல் தொகுதியாக 25 இளைஞர் யுவதிகள் தையல் மற்றும் இலத்திரனியல் பயிற்சிகளைப்பெறுகின்றனர்.

இப்பயிலுநர்கள் சுற்றாடலிலுள்ள கழிவுப் பொருட்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட கருவிகளினால் பேண்ட் வாத்தியம் இசைத்து அதிதிகளை வரவேற்றனர்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்எம்பீ. ரத்னாயக்க, சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் டபிள்யு டிடி கருணாரத்ன, மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ். புவனேந்திரன், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உபதலைவர் போல் பொடி மற்றும் மனிதவள பிரிவின் உபதலைவர் ஸ்கொட்சேமன் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இங்கு பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகளினால் தைக்கப்பட்ட ஆடைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. பயிலுநர்களது கலைநிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன. தொழில் பயிற்சிகள் ஊடாக மாற்றுத்திறனாளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சமூகத்தில் இணைப்பதே இத்திட்டத்தின் நோக்கமென சிறுவர் நிதியத்தின் தொடர்பாடல் நிபுணர் ஜூடிதீபன் பெரேரா தெரிவித்தார்.

## கிண்ணியாவில் சீனடி பயிற்சி செயலமர்வு





(அ.அச்சுதன்)

தற்காப்பு கலையான சீனடி பயிற்சி செயலமர்வு கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தொலஸ் மகே பஹன எனும்12 மாத வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயலமர்வை கிண்ணியா கலாசார அதிகார சபை ஒழுங்கு செய்திருந்தது.

இச் செயலமர்வில் வளவாளர்களாக எம்.எம்.ராபி,ஏ.பஸீகு இல்ஹாம்,ஏ.ஏ.கபூர்,ஏ.கே.பஸீர், ஆகியோர் தற்காப்பு சீனடி கலைகள் பற்றி இங்கு விரிவுரையாற்றினர். மகமாறு ,சம்மாவஜதீவு , காக்காமுனை மற்றும் பெரியாற்றுமுனை சீனடி சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கான சான்றிதழ்களை கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மது கனி,கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.எம்.ஹில்மி,திருமலை மாவட்ட செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சம்சீத் மற்றும் கலாசார அதிகார சபை ஆலோசகர் எம்.ஏ.அக்பர் சலீம்,கலாசார அதிகார சபை உப செயலாளர் எம்.ஏ.முகமட் மற்றும் வளவாளர்கள் ஆகியோரால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப் பட்டமை குறிப்பிடத் தக்கது.

## பாரம்பரிய உணவுகளின் கண்காட்சியும் செயன்முறையும்





(க.ருத்திரன்)

பாரம்பரிய உணவுகளின் கண்காட்சியும் செயன்முறையும் வாழைச்சேனை போதனாசிரியர் பிரிவின் கிண்ணையடியில் இடம் பெற்றது.

விவசாய போதனாசிரியர் ச.ஸ்ரீகண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா,கோறளைப்பற்று பிரதேச செயலாக உதவித்திட்டப்பணிப்பாளர் கங்காதரன்,உதவி விவசாயப் பணிப்பாளர் க.அருந்தசாசன்,வேள்விஷன் உத்தியோகஸ்த்தர் யேசுதாசன்,ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மக்களிடையே அருகி வரும் பாரம்பரிய உணவு பழக்கத்தினை செயல் முறைப்படுத்தும் விதமான விளக்க உரைகள்,உணவுகளை தயாரித்து காட்டல் மற்றும் பல்வேறு வகையான பாரம்பரிய உணவுகளை காட்சிப்படுத்தல் என்பன போன்ற விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறித்த நிகழ்வானது மட்டக்களப்பு விவசாய திணைக்களத்தின் பண்ணைபெண்கள் விவசாய விரிவாக்கல் திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## திருகோணமலையில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வ





(அ.அச்சுதன்)

தேசிய வாசிப்பு மாதம் ‘உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது’ எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் செயலாளர் திருமதி.ந.யாழினி அவர்களின் தலைமையின் கீழ் உப்புவெளி, சாம்பல்தீவு, வெள்ளைமணல், சீனக்குடா ஆகிய பொதுநூலகங்களால் வாசகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் பல்வேறு நிகழ்வுகள்; முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

அதனடிப்படையில் (01.12.2023) தரம் 05 மாணவர்களுக்கான இசையும் அசைவும் போட்டியும், தரம் 09 மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியும், உப்புவெளி பொதுநூலகத்தினால் நடாத்தப்பட்டது. நிகழ்வினை நூலகர் க.வரதகுமார் மற்றும் நூலக உதவியாளர்கள் திருமதி.சி.பிரபாலினி, திருமதி.க.கார்த்திகா, திரு.இர்பான் உசைத் ஆகியோரும் ஒழுங்கமைத்திருந்தனர்.

நடுவர்களாக திருமதி.திருச்சிலோகானந்தா நிரந்தராதேவி (ஓய்வுநிலை ஆசிரியை), அரசரெத்தினம் அச்சுதன் (கவிஞர், ஊடகவியலாளர்), செல்வி.இலங்கேஸ்வரன் கீர்த்தனா (சங்கீத ஆசிரியை) ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன் மாணவர்களுக்கான கருத்துரைகளும் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## சொல்லத் துடிக்குது மனசு ; 18

# மட்டக்களப்பில் வீரத்தின் அடையாளமாக வழிபட்ட சிறுதெய்வ வழிபாடுகள்

*மட்டக்களப்பு வாழ் இந்துக்களிடத்தில்
மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு வீரத்தைப்
போற்றி வழிபட்ட சிறுதெய்வ வழிபாடுகளும்
சிறப்புப் பெற்றிருந்தன என்பதும் வரலாறாகும்*

தமிழர்களின் வீரத்துடன் தொடர்புபட்ட வழிபாடுகள் பல இருக்கின்றன. பண்டைய தமிழர்கள் வீரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபாடு இயற்றி வந்திருக்கின்றனர். சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் இயற்கைக்கு நன்றி செலுத்தும் வகையில் காடு, மலை, நீர்நிலைகள் ஆகியவற்றில் எல்லாம் இறைவன் உறைந்திருப்பதாகக் கருதி அவற்றைப் போற்றி வழிபட்டு வந்தனர். அதனால்தான் சங்க காலத்தை இயற்கை நெறிக் காலம் என அழைக்கின்றனர். அக்காலத்தில் போர், வேட்டை, தொழில் ஆகியவற்றுக்குப் பயன்படுத்திய ஆயுதங்களை வைத்தே வழிபட்டு வந்தனர். சங்கமருவிய காலத்தில் பௌத்த, சமண மதங்கள் அறநெறியை வலியுறுத்தியமையால் அக்காலத்தை அறநெறிக் காலம் எனவும் அழைக்கின்றனர். அக்காலத்தின் இறுதிப் பகுதியில் இருந்து உருவ வழிபாடு ஆரம்பமாகியது என ஜேர்மனிய பண்பாட்டு, மானிடவியல், வரலாற்று ஆய்வாளர் மார்க்ஸ் முல்லர் குறிப்பிடுகின்றார். உலகின் பெரும்பாலான நாடுகளில் இன்றுவரை இயற்கை வழிபாடு நிலவி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தியாவிலும் இலஙகையிலும் இயற்கையோடு ஒத்த பல வழிபாடுகளும், அதில் பலவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறுதெய்வ வழிபாடுகளும் பேணப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளன. இலங்கையில் இந்து, பௌத்த மக்கள் இத்தயை வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபட்டு வருவதையும் காண்கிறோம். இலங்கையில் இந்துக்கள் இயற்கையோடு ஒட்டிய வகையில் பல தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். அவற்றுள் பெரும்பாலானவை சிறுதெய்வங்களாகும். அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுதெய்வ வழிபாட்டுக்கெனப் பண்டைய காலம் முதல் இன்றுவரை தனித்துவமான இடம் இருந்து வருகிறது. அவற்றுள் வீரத்தைப் போற்றும் வகையில் வழிபட்டு வந்த சிறுதெய்வ வழிபாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவ்வழிபாடுகளுள் பல வழக்கொழிந்தும் மருவியும் சென்றுவிட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. யக்ஷ வழிபாடு, வீரபத்திரர், வதனமார், முன்னடித்தம்பிரான், பரமநயினார், பேயாண்ட நயினார், பெரியதம்பிரான், காளமாமுனி, காளி, கண்ணகி (கொம்பு முறிப்பு), வைரவர் (ஆதி வைரவர், நரசிங்க வைரவர், கால வைரவர், சுடலை வைரவர்) ஆகியன வீரத்தை மையப்படுத்தி வழிபடப்பட்டு வந்த சிறுதெய்வ வழிபாடுகளாகும். இவற்றுள் முன்னைய இரு கட்டுரைகளில் யக்ஷ வழிபாடு, வதனமார், முன்னடித்தம்பிரான், காளமாமுனி, பேயாண்ட நயினார் ஆகிய சிறுதெய்வ வழிபாடுகள் பற்றி கூறப்பட்டிருக்கின்றன.

### வீரபத்திரர் வழிபாடு

தக்கன் விதிமுறைகளை அனுசரியாது சிவனை அவமதிக்கும் வகையில் யாகத்தை நடத்தியமையினால் அந்த யாகத்தை அழிப்பதற்காகச் சிவனால் படைக்கப்பட்டவரே வீரபத்திரர் ஆவார். அவர் வீர, தீர சாகசங்கள் புரிந்து தக்கன் செய்த யாகத்தையும் அழித்ததாக வரலாறு கூறுகிறது. இச்சம்பவத்தினை அடுத்துத் தமிழ் நாட்டில் வீரத்தின் தெய்வமாக வீரபத்திரர் வழிபடப்பட்டார். தமிழகத்தில் பாண்டியர், சோழர் ஆட்சிக்காலத்தில் சிறப்புற்றிருந்த வீரபத்திரர் வழிபாடு இலங்கையில் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் பரப்பபபட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றாதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. மட்டக்களப்பில் வீரபத்திரரை வீரத்தின் தெய்வமாகவும், உக்கிரத் தெய்வமாகவும் கருதி வழிபட்டு வருகின்றனர். மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலையின் எல்லையிலும், முனைக்காடு கிராமத்தின் தெற்கிலும் அமைந்துள்ள முனைக்காடு வீரபத்திரர் ஆலயம் மிகப் பழமை வாய்ந்ததாகும். பண்டுதொட்டு வீரபத்திரர் பந்தலுக்கு முன்னால் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தாந்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாளில் திருவேட்டையும் குடுக்கை (கஞ்சிமுட்டி) கூறும் நிகழ்வும் நடந்து வந்தன. ஒரு நிகழ்வில் கண்டி மன்னன் முதலாம் விமலதர்மசூரியன் (1592-1604) கலந்து கொண்டு சீர்கள் வழங்கியதாக மட்டக்களப்பு மான்மிய திருப்படைக் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

களுவாஞ்சிக்குடி வீரபத்திரர் ஆலயம் மிகப் பழமை வாய்ந்து. இங்கு பாடப்படும் வீரபத்திரர் காவியம் கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கன் (1635-1644) காலத்துக்குரியது என நம்பப்படுகிறது. ஏறவூர் வீரபத்திரர் ஆலயம் கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கள் (1798-1815) காலத்தில் வாழ்ந்த பாலிப்போடியார் என்பவரால் கட்டப்பட்டது என நம்பப்படுகிறது'. காரைதீவு, தேற்றாத்தீவு, புளியந்தீவு ஆகிய இடங்களிலும் பழமை வாய்ந்த வீரபத்திரர் ஆலயங்கள் உள்ளன. களுவாஞ்சிக்குடி, ஏறாவூரிலுள்ள ஆலயங்களில் காணப்படும் வீரபத்திரர் விக்கிரகங்கள் வீரத்தை வெளிப்படுத்தும் வகையில் உக்கிரத்தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றன. இவ்வுக்கிரத் தன்மையினை முனைக்காடு, தேற்றாத்தீவு ஆகிய இடங்களிலுள்ள வீரபத்திரர் ஆலயங்களில் வருடாந்த உற்சவத்தின் போது உருக்கொண்டு தெய்வமாடுபவர்கள் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். இவ்விடங்களில் ஆகம முறைப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுப் பூசைகள் நடைபெற்றாலும் வருடாந்தச் சடங்குகள் பத்ததி முறையில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



### பரமநயினார் வழிபாடு

பரமநயினார் மனிதனாக வாழ்ந்து தெய்வமாக மாறிய ஒருவராக மதிக்கப்படுகின்றார். பரமநயினார் வழிபாடு தென்னிந்தியாவின் தொண்டை மண்டலம், இராமநாதபுர மாவட்டம் ஆகிய பிரதேசங்களில் இருந்து குடியேறியவர்களால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. பரமநயினாரை அவர் வாழும் காலத்தில் கண்ட உருவத்தைப் பொம்மையாகச் செய்து வைத்துப் பாரம்பரிய முறைப்படி வழிபட்டு வருகின்றனர். முறுக்கு மீசையும், மேல் சட்டையும் தலைப்பாகையும் அணிந்த தோற்றத்தில் பந்தலின் நடுவில் வைத்துச் சடங்கில் வழிபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்த்தில் பரமநயினார் வழிபாடு ஏறாவூர், ஆரைப்பற்றை, தாளங்குடா ஆகிய இடங்களில் வழிபடப்பட்டு வந்தன. பொலனறுவையில் 13, 14 ஆம் நூற்றாண்டுகளில் கலிங்கர் ஆட்சி வீழ்ச்சியைத் தொடர்ந்து கலிங்கர் சத்துருக்கொண்டான், ஏறாவூரிலும் பின்னர் காத்தான்குடி, ஆரைப்பற்றை, காங்கேயனோடை, தாளங்குடா ஆகிய இடங்களிலும் குடியேறினர். அவ்வவ் இடங்களில் மாட்டுப்பட்டிக் காலைகளுக்கு அருகில் பந்தலிட்டு வதனமார், பரமநயினார் ஆகியோரையும் வழிபட்டு வந்ததாக அறிய முடிகிறது. இவ்வாறுதான் ஆரைப்பற்றையில் பரமநயினார் வழிபாடு உருவாகி இருக்கலாம் என நம்புகின்றனர். இவ்வழிபாடு தற்காலத்தில் தாளங்குடாவில் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பரமநயினாருக்கும் வதனமாருக்கம் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதை தாளங்குடாவில் நடைபெறும் சடங்கில் இருந்து அறிந்து கொள்ளலாம். பரமநயினார சடங்கில் பதததாசி முறைப்படி வதனமார், சுவாதி அம்மன் ஆகியோருக்கும் மடை வைக்கப்படுகின்றன. வதனமாரின் மூத்த சகோதரனாக பரமநயினார் இருக்கலாம் என்றும் ஒருசாரார் நம்புகின்றனர். பரமநயினார், வதனமார், முன்னடித்தம்பிரான், பேயாண்ட நயினார் ஆகியோர் யானைகளை அடக்கிக் கட்டுதல், குழுமாடுகளை அடக்கிக் கட்டுதல், அவற்றை உரியவர்களிடம் ஒப்படைத்தல் ஆகிய வீரசாகசங்களைப் புரிந்தவர்களாகக் கருதி அவர்களை வழிபட்டு வந்தனர். ஆரைப்பற்றையில் முதன்முதல் தோன்றிய வழிபாடாக பரமநயினார் வழிபாடு கொள்ளப்படுகிறது. அவ்விடத்தில் நடைபெற்ற பரமநயினார் வழிபாடு தற்பொழுது ஐயனார் வழிபாடாக மாற்றம் பெற்றுள்ளது.

பரமநயினார் பற்றித் தெரிந்து கொள்வதற்கு, மரபு வழியான செய்திகளும், சடங்கு முறைகளும், பரமநயினார் அகவல், பரமநயினார் காவியம் ஆகியனவும் பெரிதும் உதவுகின்றன. தாளங்குடாவில் ஆனிமாதத்தில் ஒரு வெள்ளிக் கிழமை ஆரம்பமாகும் சடங்கு திங்கக் கிழமை முடிவடையும். மண்டபம் காவல் பண்ணுதல், மடைப்பெட்டி எடுத்து வரல், நோர்ப்புக் கட்டுதல், பாற்பொங்கல், பள்ளயம், நோர்ப்பு எறிதல் முதலியன சடங்கின் பிரதான அம்சங்களாக இருக்கும்.



சின்னத்தம்பி
குருபரன்

தாளங்குடா மாழிகையடித் தெருவில் இருந்து மடைப்பெட்டி ஊர்வலமாக எடுத்து வரப்படும். இங்கு நடைபெறும் வழிபாடு ஏனைய சடங்கு வழிபாடுகளையும் விடப் பல சிறப்பியல்புகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இச்சடங்கில் தெய்வமாடும் சகலரையும் மயங்கி விழச் செய்யும் படுகளச் சடங்கு முக்கியமானதாகும். இவ்வாறு நடைபெறும் பரமநயினார் வழிபாடு அவரின் வீரத்தையும் வீரசாகசங்களையும் எடுத்துக் காட்டுவதோடு பல சிறப்பியல்புகளையும் கொண்டதாக அமைந்திருக்கின்றன.

### பெரியதம்பிரான் வழிபாடு.

சிவபெருமானைப் புறக்கணித்து தக்கன் செய்த யாக குண்டத்தில் இருந்து தோன்றியவரே பெரியதம்பிரான் ஆவார். தக்கனின் யாகத்தில் இருந்து தோன்றியமையினால் தக்கயாகேஸ்வரர் என்ற பெயரும் இவருக்குண்டு. தக்கனின் யாகத்தை அழிப்பதற்காகச் சிவனால் ஏவப்பட்ட வீரபத்திரர் யாகத்தை அழித்தபோது பெரியதம்பிரான் ஓடி மறைந்து சலவைத் தொழிலாளி ஒருவரிடம் தஞ்சம் புகுந்ததாகவும் அவர் தனது சலவை செய்யும் சாடியில் மறைத்து வைத்திருந்ததாகவும் வரலாறு கூறுகின்றது. இது வீரபத்திரருக்கத் தெரிந்தமையால் சலவைத் தொழிலாளி அவரின் இரத்தக் கறை படிந்த ஆடைகளைத் துவைத்துக் கொடுத்துச் சாந்தப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. பெரியதம்பிரானின் தோற்றம், அவரின் பெருமைகளைத் தெரிந்து கொண்ட சலவைத் தொழிலாளர்கள் அவரைப் போற்றித் தமது குல தெய்வமாக ஆக்கிக் கொண்டனர். பெரியதம்பிரான் பிறந்த அதே முகூர்த்தத்தில் காளி குலத்துச் சலவைத் தொழிலாளப் பெண்ணுக்கு மகனாகப் பிறந்தவரே நீலா சோதையன் என்ற வீரனாவார். இவர்கள் இருவரும் சத்திரியர், வைசீயர், வேளாளர் குலத்தைச் சேர்ந்த 60 வாலிபர்களும் சேரந்து ஆயுதப் பயிற்சி பெற்றதாகவும், பெரியதம்பிரான் மிகப்பெரிய தண்டாயுதம் வைத்திருந்ததாகவும் நம்பப்படுகிறது. வலவை என்னும் நகரைப் பெரியதம்பிரான் ஆட்சி செய்ததாகவும், நீலா சொதையன் அமைச்சராகப் பணியாற்றியதாகவும் அறிய முடிகிறது.

பெரியதம்பிரான் வழிபாடு தம்பிலுவில், அக்கரைப்பற்று, பாண்டிருப்பு, நீலாவணை, முனைக்காடு, தாளங்குடா, அரசடி, ஏறாவூர், ஆறுமூத்தான் குடியிருப்பு, வந்தாறுமூலை ஆகிய இடங்களில் சலவைத் தொழிலாளர்களால் அவருக்கு வழிபாடு இயற்றப்பட்டு வருகின்றனர். இவ்விடங்கள் சிலவற்றில் கோயில்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் அரசடிப் பெரியதம்பிரான் கோயில் முதலாம் கஜபாகு மன்னன் காலத்தில் தாபிக்கப்பட்டிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. முனைக்காடு கிராமத்தில் உள்ள பெரியதம்பிரான் பந்தலை எனையவர்களும் வழிபட்டு வருகின்றனர். பெரியதம்பிரான் வழிபாடு பற்றிய மரபு வழியான செய்திகளும், சடங்கு முறைகளும், பெரியதம்பிரான் காவியம், நீலா சோதையன் காவியம், பெரியதம்பிரான் அடைக்கல அகவல் ஆகிய பாடல்களின் மூலமாக அறிய முடிகிறது. இரண்டாம் சேனன் காலத்தில் தனக்குரிய படையை மட்டக்களப்பில் திரட்டினான் என்றும் அவனின் தளபதியாக இருந்த குட்டகன் (குத்திகன்) சலவைத் தொழிலாளர் குலத்தைச் சேர்ந்தவன் எனவும் அறிய முடிகிறது. அவன் மூலமாக மட்டக்களப்பில் பெரியதம்ரான், பெரியசாமி வழிபாடுகள் பரப்பப்பட்டிருக்கலாம் எனவும் நம்ப முடிகிறது. பெரியதம்பிரான், நீலா சோதையன் இருவரும் பல போர்களில் வெற்றி பெற்றவர்களாகவும், யானை, குதிரை, குழுமாடு ஆகியவற்றை அடக்கி வீர, தீர சாகசங்கள் புரிந்தவர்களைத் தமது குல தெய்வமாகக் கருதி இளநீர், மாங்கனி, கரும்பு, கடலை, பொங்கல், உரொட்டி வைத்து வழிபட்டு வருகின்றனர்.

### கண்ணகியும் கொம்பு முறிப்பு வழிபாடும்.

கொம்பு முறிப்பு கண்ணகி அம்மனோடு தொடர்புபட்ட வழிபாடாகக் கொள்ளப்படுகிறது. கண்ணகி மதுரையை எரித்து ஆவேசத்துடன் திரும்பி வரும் போது மதுரை நகரில் இடையர் சேரியில் வாழ்ந்த இளைஞர்கள் கண்ணகியின் சீற்றத்தைத் தணிவிப்பதற்காக மஞ்சள் கொம்பெடுத்து வசந்தன் கூத்தாடி முதன் முதலில் கொம்பு முறித்து விளையாடினர் என்பது ஐதீகம். இவை தொடர்பான செய்திகள் எதுவும் சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை காவியம் எதிலும் காணப்படவில்லை. கண்ணகியின் சீற்றத்தைத் தணிவிப்பதற்காக இளைஞர்களால் கொம்பு விளையாட்டு விளையாடியமையினால் வீரத்தை வெளிப்படுத்தும் இவ்விளையாட்டு கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இதனைப் பின்பற்றி இலங்கையிலும் கொம்பு விளையாட்டை மேற்கொண்டு வந்தனர். சிங்கள பௌத்தர்கள் பத்தினி தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபடுத்தி இவ்விளையாட்டினை மேற்கொண்டு வந்தனர். பழங்குடியினராகிய வேடர்களும் இவ்வழிபாட்டினை மேற்கொண்டு வந்தமைபற்றி அறிய முடிகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் கண்ணகி வழிபாடு மேற்கொள்ளப்பட்டாலும் சில இடங்களில் மாத்திரமே கண்ணகி வழிபாட்டுடன் இணைந்த வகையில் கொம்பு விளையாட்டு இடம்பெற்று வந்தன. கண்ணகிக்குக் கோயில் இல்லாத மண்டூர், களுதாவளை, தேற்றாத்தீவு ஆகிய கிரமங்களிலும் கொம்பு விளையாட்டுக்கள் நடைபெற்று வருகின்றன. இக்கிராமங்களில் கொம்பு விளையாடிய இடங்களை இன்றும் 'கொம்புச் சந்தி' என அழைத்து வருகின்றனர்.

மட்டக்களப்பில் கொம்பு முறிப்பு விளையாட்டு பெரும்பாலும் வைகாசி, ஆனி மாதங்களில் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வந்தன. தற்பொழுது ஒரு சில இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் இவ்விளையாட்டு வழக்கொழிந்துவிட்டன. கொம்பு முறிப்பு விளையாட்டில் தந்தை வழி மரபின்படி ஊர் மக்கள் கண்ணகி அணி (அம்மன் வாரம்), கோவலன் அணி (சுவாமி வாரம்) என இரு அணிகளாகப் பிரிக்கப்படுவர். கண்ணகி அணி தென்சேரி எனவும், கோவலன் அணி வடசேரி எனவும் அழைக்கப்படும். கொம்பு விளையாட்டுடன் போர்த் தேங்காய் அடித்தல், மாலை வேளையில் பூசையும் வெற்றிக் கொம்பு முறித்தலும், வசந்தன் ஆடல், ஏடகம் கட்டி ஊர் சுற்றுதல், கொம்புக்கு மந்திரக் கிரியை செய்தல், கொம்புத் தட்டெடுத்தல், வசைபாடல், குளிர்த்தி ஆடல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். கொம்பு விளையாட்டு நிகழ்ச்சிகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும். பொருட்களைத் தயார்படுத்தல், கொம்பு தூது பிடித்தல், கொம்புகளை வரிதல், கொம்புகளைப் பூட்டுதல், அடைகட்டலும் ஆப்படித்தலும், தாய்மரத்துக்கும் செவ்வாய்க் குற்றிக்கும் இடையில் இணைத்தல், அடைபிடித்தலும் வடம் இழுத்தலும், வெற்றி தோல்வியைத் தீர்மானித்தல் என்ற ஒழுங்கில் ஒவ்வொரு செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொம்பு விளையாட்டு நிறைவுறும்.

கொம்பு விளையாட்டுக்குத் தேவையான பொருட்களாகக் கொப்புகள், பில்லி, அடை. ஆப்பு, நெஞ்சடிப் பலகை, தாய்மரம், செவ்வாய்க் குற்றி, மரவளையம், செவ்வாயக் குற்றி வளையம், அரிப்பு, வடம் தாங்கி, வடம் ஆகியன பிரதானமான பொருட்களாகும். இவ்விளையாட்டில் தென் சேரியார், வடசேரியாருக்கிடையில் பிரிவினையும் மோதல்களும் ஏற்பட்டமையால் ஊர் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல இ'டங்களில் கொம்பு விளையாட்டு நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஓரிரு இடங்களில் மாத்திரம் இவ்வீர வளையாட்டு கணணகி அம்மனை மையப்படுத்தி நடந்து வருவதனைக் காணமுடிகிறது.

### காளி அம்மன் வழிபாடு

சக்தியின் ஐந்து வகைகளில் போகசக்தியாகப் பராசக்தியும், வீரத்துக்குத் துர்க்கையும், கோரத்துக்குக் காளியும், அதிகாரத்துக்கு நாராயணியும், அருட் சக்திக்கு மனோன்மணியுமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். வீரத்தின் திருவுருவமாகவும் பல ஆயுதங்களைக் கையில் ஏந்திய உக்கிர தெய்வமாகவும் தோற்றமளிக்கும் காளி அம்மன் வழிபாடு உலகின் பல நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பல பெயர்களில் பல வடிவங்களில் காளி வழிபடப்பட்டு வருகிறாள். இலங்கையில் இந்துக்கள் தமது பிரதேசங்களில் சிறப்பாகச் சடங்கு செய்து வழிபட்டு வருகின்றனர். பல பரிபாரத் (பரிகலத்) தெய்வங்களைத் தன்னகத்தே கொண்டதாக காளி அம்மன் காணப்படுகிறாள். காளிக்குப் பன்னீராயிரம் பரிகலத் தெய்வங்கள் உள்ளதென்பது பொது வழக்கு. இதுபற்றிக் காளி அம்மன் அகவல் பின்வருமாறு கூறுகிறது.

> *'இடது புறத்திலே யியமராசனும்
> வலது புறத்திலே பரமேசு பரனும்
> முன்னே மும்மூர்த்திகளும் பின்னே கின்னரர்களும்
> கோடி வயிரவரும் கூறுபரிகலமும்'*

மட்டக்களப்பில் காளி அம்மனை மையப்படுத்திய பல கோயில்கள் இருந்தாலும் காளி, பத்திரகாளி, வீரமாகாளி ஆகிய வடிவங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து வழிபட்டு வருகின்றனர். இங்குள்ள மக்கள் சக்தி வழிபாட்டுக்கு அதிகூடுதலான முக்கியத்துவம் கொடுத்த வருகின்றனர். அதிலும் மாரி, காளி, கண்ணகி அம்மன்களுக்கு சிறப்பான இடம் வழங்கப்பட்டு வழிபாடு இயற்றி வருகின்றனர்.

*வழிபாடும் நம்பிக்கையும் மக்களிடத்தில் - இன்று
வாழ்க்கையின் போக்கில் தாக்கம் புரிகின்றன..*

**வழிபாடும் நம்பிக்கையும் தொடரும்**

# திறனையும் மனப்பாங்கையும் விருத்தி செய்ய பாடசாலைகள் முன்வர வேண்டும்



சமூக சவால்களுக்கு முகங்கொடுக்க கூடிய ஆளுமையுள்ள பிள்ளைகளை சமூகத்திற்கு அனுப்புவதே பாடசாலையின் நோக்காகும். இந் நோக்கத்தை அடைவதற்கு புத்தகத்தில் இருக்கின்ற விடயங்களை மாத்திரம் ஒப்புவிக்கின்ற அறிவுள்ளவர்களால் மட்டும் சாத்தியமாகாது. இதனை சாத்தியப்படுத்த பாடசாலையில் இணைப்பாடவிதானத்தை பாடவிதானத்திற்கு சமமாக கொண்டு செல்ல வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதனை ஏற்றுக்கொள்வதற்கு பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள் இன்னமும் முழுமையாக தயாராகவில்லை என்பதும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். இதற்கு காரணம் தேசிய பரீட்சைகளுக்கு குறிப்பாக பாடங்களை கற்று அதனை ஒப்புவிக்கின்ற கல்வி முறைமைக்கே அதிகம் முக்கியத்துவம் வழங்குவதினால் இணைப்பாடவிதான செயற்பாட்டில் எல்லோரும் பங்களிப்பது குறைவாகவே இருக்கின்றது.

பாடசாலை நேரத்தில் பாடவிதானங்களுக்கே நேரசூசி வழங்கப்பட்டுள்ளமையினால் ஆசிரியர்களும் தங்களுக்குரியதான நேரத்தில் கற்பித்தலை மட்டும் மேற்கொண்டு சென்றுவிடுவோம் என எண்ணுகின்றனர். இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான பயிற்சிகளை பாடசாலை நிறைவுபெற்றதன் பின்னர் அல்லது வார இறுதிநாட்களிலேயே வழங்க வேண்டிய நிலை இருப்பதினால் ஆசிரியர்களின் பங்களிப்பும் மிகக்குறைவே. இச்செயற்பாடு மாணவர்களின் திறன், மனப்பாங்கு என்பவற்றில் குறைந்தளவிலான விருத்தி நிலையே ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய பல இணைப்பாடவிதான செயற்பாடுகள் இருக்கின்றன. இவற்றை பாடசாலைகள் முழுமையாக செய்வதற்கு பாடசாலை நேரத்திலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான நேரசூசி திட்டமிடப்பட வேண்டும் என்பது பலரது கருத்தும் கூட.

மாணவர்கள் அனைவருமே திறமையானவர்கள. அவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கேற்ற செயற்பாடுகளைத்தான் பாடசாலைகள் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடயத்தில் தேர்ச்சி உடையவர்களாக இருப்பர். அவ்வாறு தேர்ச்சி கொண்டவர்களை இன்னும் இன்னும் உற்சாகப்படுத்தி அதில் உயர்தேர்ச்சியை அடைய செய்வதன் ஊடாக சிறந்த பயனைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், எதிர்கால தொழில் உலகிற்கும், சவால்களுக்கும் முகம் கொடுக்க கூடிய நிலையை மாணவர்கள் பெற்றுக்கொள்வர்.



மாணவர்கள் சிலர் சாதாரண தரத்தில் சித்தியடையாது அல்லது உயர் தரத்தில் சித்தியடையாது சமூகத்திற்குள் செல்லலாம். ஆனால் அவ்வாறான மாணவர்கள் திறனற்றவர்களாக வெளியில் செல்வதுதான் ஆபத்தானது. அவ்வாறு செல்வதென்பது பாடசாலைவிடும் தவறு என்று கூட கூறமுடியும். ஏன்னெனில் தரம் 1 தொடக்கம் 11வரை கற்ற மாணவரின் திறனை மனப்பாங்கை பாடசாலை அறிந்து கொள்ளவில்லை என்பதினாலேயே திறனற்ற மாணவர்கள் சமூகத்திற்குள் செல்கின்றனர். அவ்வாறின்றி அச்சமூகத்தில் வாழ்வதற்கு நிலைத்திருப்பதற்கு ஏற்ற திறனை பாடசாலைகள் இனங்கண்டு செய்ய வேண்டும். இதற்காக பாடசாலைகள் புதிய புதிய கோணத்தில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இவ்வேலைத்திட்டங்கள் பழையதாக இல்லாமல் புத்தாக்க சிந்தனை கொண்டதாக இருப்பதோடு, சமூகத்திலும் இது தொடர்பிலான ஆய்வுகளை நடாத்தி அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டும். இதன்மூலம் சிறந்ததொரு ஆளுமையுள்ள சமூகத்தினை உருவாக்க முடியும்.

புத்தாக்க சிந்தனையுள்ள அதிபர், ஆசிரியர்களினால்தான் அனைத்தையும் சாத்தியமாக்க முடியும். எந்தொரு புதிய செயற்பாட்டின் போதும் மறையான சிந்தனையை வளர்த்துக்கொள்வதினால் எதையும் சாத்தியமாக்கி கொள்ள முடியாது. சாத்தியப்படுத்தலை மேற்கொள்வதற்கு நேரான பார்வையும் நேர்சிந்தனையும் வேண்டும். உடனடியாக வெற்றி பெற்றுவிட்டால் அவ்வெற்றிக்கான மதிப்பு குறைவாகவே இருக்கும். பல தோல்விகளை கடந்து பெறும் வெற்றிக்கு பெரும் மதிப்பு இருக்கும். இது யாதார்த்தமான உண்மை. அதே போன்று பாடசாலையில் முன்னெடுக்கப்படும் புத்தாக்க செயற்பாடுகள் பல்வேறு காரணிகளால் குறிப்பாக வளத்தேவை, மனப்பாங்கு, அர்ப்பணிப்பு போன்ற செயற்பாடுகளினால் தோல்வியை தழுவலாம். ஆனாலும் தோல்வி அடைந்தமைக்கான காரணங்களை இனங்கண்டு அவற்றினை சரிப்படுத்தி கொள்கின்ற போது வெற்றியை அடையலாம்.

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் இணைக்கின்ற போது தரமான மாணவர் சமூகத்தினை உருவாக்க முடியும். பாடசாலைகள் இதற்காக செயற்பாடுகளை திட்டமிட வேண்டும்.

# காரைதீவில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்க கலாச்சார நிகழ்வு









**(எம்.ஏ.ஏ.அக்தார்)**

இனங்களுக்கிடையிலான நல்லுறவை கட்டியெழுப்பும் வகையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்க கலாச்சார நிகழ்வொன்று அண்மையில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் யெகராஜன் தலைமையில் காரைதீவு. இராம கிருஷ்ணன் பெண்கள் பாடசாலையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர்கள், சிறுவர் மகளிர் நன்நடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள் , காரைதீவு,மாளிகைக்காடு மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச மாணவர்களும் கலந்து கொண்டனர் .

அதிதிகளினால் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன.

# கிழக்கு மாகாண தமிழ் பேசும் மதுவரி உத்தியோகத்தர்களுக்கான இருநாள் வதிவிட செயலமர்வு









**( வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண தமிழ் பேசும் மதுவரி உத்தியோகத்தர்களுக்கான இருநாள் வதிவிட செயலமர்வு சனி(2) ஞாயிறு(3) தினங்களில் திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண மதுவரி திணைக்கள உதவி ஆணையாளர் சண்முகம் தங்கராஜா தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் வளவாளர்களாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சொலிஸ்டன்ஜனரல் ஜானகபண்டார மற்றும் சிரேஸ்ட அரசதரப்பு சட்டவாதியான நாகரெட்னம் நிசாந்தன் ஆகியோர் விரிவுரை வழங்கினர்.

இதன் போது நீதிமன்றத்தில் மதுவரி திணைக்களத்தின் ஊடாக வழக்குகளை கொண்டு செல்லும் போது வழக்கில் ஏற்படும் சட்டரீதியான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளுதல் தொடர்பாகவும், நஞ்சு அபின் அபாயகரமான ஔடதங்கள் சட்டம், குற்றவியல் சட்டம், சாட்சி கட்டளை சட்டம், தண்டனை கோவை சட்டம் போன்றவற்றில் ஏற்படும் சந்தேகங்களையும் தீர்த்துக் கொள்வதாகவும் இச்செயலமர்வில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியுடன் நடைபெற்ற இச் செயலமர்வை கிழக்குமாகாண மதுவரி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ச.தங்கராஜாவின் வழிகாட்டலில் நடைபெற்ற செயலமர்வில் ஊவா மாகாண உதவி ஆணையாளர் செ.ரஞ்சன், மட்டக்களப்பு மதுவரி அத்தியட்சகர் நியுட்டன் அவுஸ்கோன், மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை, திருகோணமலை மதுவரி திணைக்களத்தின் பொறுப்பதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.


# அருவி பெண்கள் வலையமைப்பினால் ஒல்லிக்குளம் கிராம மக்களுக்கு பல்வேறு உதவிகள்!!





மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான மயூரி ஜனன் தலைமையில் மட்டக்களப்பில் காணப்படும் தேவைப்பாடுகள் மிகுந்த கிராமங்களை தேடி பல்வேறுபட்ட உதவித்திட்டங்களையும் சேவைகளையும் வழங்கி வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக மட்டக்களப்பு நகர் பகுதியில் காணப்படும் தேவைப்பாடுகள் மிகுந்த கிராமங்களில் ஒன்றாக திகழும் ஒல்லிக்குளம் கிராம மக்களுக்கு பல்வேறு உதவிகள் மற்றும் சேவைகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய மக்கள் செறிந்து வாழும் ஒல்லிக்குளம் கிராமத்தில்



உள்ள பாடசாலையானது சுகாதாரவசதிகள் அற்று பற்றைகாடாகவும் பாம்பு தொல்லை அதிகமாகவும் காணப்பட்ட வருவதாக அக்கிராம மக்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து அக்கிராமத்தில் உள்ள மக்களை கொண்டு குறித்த பாடசாலை வளாகம்ம் சுத்தம் செய்யப்பட்டதுடன் சுத்திகரிப்பு உபகரணங்களும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அக்கிராமத்தை சேர்ந்த சிறுவர்கள், பெண்கள் அடங்கலாக 200 பேருக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டதுடன் 50 பெண் பிள்ளைகளுக்கான சுகாதார பொதிகளும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது. பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கான விழிப்புணர்வும் இதன்போது வழங்கப்பட்டதுடன், இச் செயல்பாடானது அங்குள்ள பெண்களுக்கு மிகவும் சந்தோசத்தினையும் உள ரீதியான ஒரு தைரியத்தினையும் கொடுத்திருந்தது. இந்நிகழ்வில் அருவி பெண்கள் வலையமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான மயூரி ஜனன், அருவி பெண்கள் வலையமைப்பின் சிரேஸ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் வலையமைப்பின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட கிராம மட்ட பிரதிநிதிகளும் இதன் போது கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த 10 வருடங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தேவை பாடுடைய கிராமங்களில் வசிக்கும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக பல்வேறுபட்ட சேவைகளை இவ்வலையமைப்பானது மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 37

# வயலின் இசைக் கலைஞர் இசைக் கலைமணி சிங்காரவேல் திருமாறன் சாதனை கலைப் பயணம்



இனிய உணர்வு தரும் ஓசைத் தொகுதிகள் ஓர் ஒழுங்கு முறையிலே வெளிப்படுவதே இசை. அவ்வாறான இசையினை எமது காதிற்கு இனிமையாக தருவதில் இசைக்கருவிகளும் முக்கியம் வாய்ந்தனவாக கருதப்படுகின்றன. அவ்வாறான இசைக்கருவிகளை பொதுவாக நரம்புக்கருவிகள், தோற்கருவிகள், துளைக் கருவிகள், கஞ்சற்கருவிகள் என்றவாறு வகைப்படுத்தலாம். அவற்றில் நரம்புக் கருவிகள் வகைக்குள் வயலின் இசைக்கருவி கர்நாடக இசையில் முக்கியமான துணைக் கருவியாக பயன்பட்டு வருகிறது. வயலின் இசைக்கருவியானது வில் போட்டு இசைக்கப்படும் தந்திக் கருவியாகும். இது பழங்காலத்தில் ''பிடில்'' என்று அழைக்கப்பட்டது.

இவ்வாறான சிறப்புமிக்க வயலின் இசைக் கருவியினை தனது 13ஆவது வயதிலிருந்து முறையாகக் கற்றுத் தேர்ந்தவரும், திருகோணமலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும், தற்போது திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லாரியில் கர்நாடக சங்கீதப் பாட ஆசிரியராக கடமையாற்றி வருபவரும், வயலின் இசைக் கலைஞருமான இசைக் கலைமணி சிங்காரவேல் திருமாறன் கலைஞர் சுபீட்சம் பத்திரிகையின் ''திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை'' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்விகாணல் இங்கு எமது வாசகர்களுக்காக------

**இசைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் குறித்தும், அதனூடான இசைப் பயணம் குறித்தும் கூறுவீர்களா?**

எனது தாய், தந்தையரது பரம்பரையில் அதிகமானோர் இசைத்துறையில் இருந்துள்ளனர். எனது தந்தையின் சகோதரர் முறையான சந்திரலிங்கம் ஆசிரியரிடம் சிறுவயதில் வாய்ப்பாட்டை ஆரம்பித்தேன். பின்னர் யாழ்ப்பாணத்தில் எனது தாயின் சிறிய தந்தையாரான சிவபாதசுந்தரம் (காந்தி) ஆசிரியரிடம் வயலின் இசைக் கருவியை கற்க ஆரம்பித்தேன். 1988ஆம் ஆண்டு அவ் ஆசிரியர் நாட்டு பிரச்சனை காரணமாக இந்தியா சென்றுவிட்டார். அதன் பின்னர் எனது தாயாரின் மைத்துனியின் கணவரான ந.ஒ.குமாரசாமியிடம் சிலகாலங்கள் வயலின் இசையைக் கற்றேன். அதன் பின்னர் சித்திவினாயகம் ஆசிரியர், அவரது மகன் கண்ணன் இவ்வாறாக பலரிடமும் கற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் ராமநாதன் அக்கடமியில் விரிவுரையாளராக கடமையாற்றிய பாக்கியலெட்சுமி,

என்பவரிடமும் கற்றுள்ளேன். தற்போது நேரம் கிடைக்குமிடத்து கோபிதாஸ் அவர்களிடம் கற்று வருகிறேன்.

**இசைத்துறையில் உங்களது முதல் மேடை வாய்ப்பு குறித்து கூறுவீர்களா?**

தரம்9இல் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது எனது மைத்துனரும், எனது அம்மாவின் ஒன்றுவிட்ட தம்பியாருமாக நாங்கள் மூவரும் பிரத்தியேகக் கல்வி நிலையத்தில் நடைபெற்ற சரஸ்வதி பூசை நிகழ்வில் முதன்முதலாக வயலின் வாசித்தமையே முதல் மேடை வாய்ப்பாகும். அதனைத் தொடர்ந்து இளம் கலைஞர் மன்றத்தில் வருடாவருடம் நடைபெறும் இசை விழாவில் மூன்று தடவைகள் தொடர்ந்து வாசித்துள்ளேன். முதல் தடவை அவ் விழாவில் வயலின் வாசித்துவிட்டு மேடையிலிருந்து இறங்கியதும் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயா எனது கரங்களைப் பிடித்து கொஞ்சி விட்டு இந்தக் கரங்கள் பிரகாசிக்கும் என்று வாழ்த்தியிருந்தார். அத் தருணமானது என்றுமே எனது வாழ்நாளில் மறக்கமுடியாத விடயமாகும். தொடர்ந்து அக்கடமி முடித்து திருகோணமலை வந்ததும் சிவன் கோவிலிலேயே முதலில் வயலின் வாசித்தேன். அவ்வாறாகத் தொடர்ந்து பல மேடைகளிலும் வாசித்து வருகிறேன்.

**கர்நாடக இசையில் நீங்கள் கற்றுக் கொண்ட இசைக் கருவிகள் அல்லது முதன்மையான இசைக்கருவி குறித்து கூறுவீர்களா?**

எனது முதன்மையான இசைக்கருவி வயலின். வேறு இசைக்கருவி என்று குறிப்பிடுமிடத்து ஹார்மோனியத்தை நானாகவே சுயமாக கற்றுக் கொண்டேன். பின்னர் யாழோசை கண்ணன் ஆசிரியரிடம் கிட்டார் பயின்றேன். அவரிடமே புல்லாங்குழல் வாசிக்கவும் ஓரளவுக்கு கற்றுக் கொண்டேன்.

**நீங்கள் பணி புரிந்த, பணி புரிகின்ற பாடசாலைகளில் இசை மீதான மாணவர்களின் ஈடுபாடு குறித்தும், அவர்களினூடாக நீங்கள் மேற்கொண்ட நிகழ்ச்சிகள், வெற்றிகள் குறித்தும் பகிர்ந்து கொள்வீர்களா?**

யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து அங்கிருந்து 1999இல் இசைக்கலைமணி என்ற பட்டத்தைப் பெற்று வெளியாகி 2000ஆம் ஆண்டில் தி/பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயத்திலும், 2004ஆம் ஆண்டில் தி/ கப்பல்துறை சரவஸ்வதி வித்தியாலயத்திலும், 2007ஆம் ஆண்டில் தி/ நிலாவெளி கைலேஸ்வராக் கல்லூரியிலும் 2017 இலிருந்து தற்போது வரை தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியிலும் கர்நாடக சங்கீதப் பாட ஆசிரியராகவும், வயலின் இசையினைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராகவும் உள்ளேன்.

நான் கற்பித்த, கற்கின்ற பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் பெரும்பாலும் தமது எதிர்கால வேலை வாய்ப்புக்கான ஒரு கருவியாகவே இசைத்துறையைத் தேர்ந்தெடுத்து கற்கின்றனரே தவிர அவ் இசையினைக் கலையாக மதித்து உணர்ந்து கற்க வேண்டுமென்ற ஆர்வம் மிக மிகக் குறைவாகவே உள்ளது. இன்றைய பெற்றோர்கள் கலை என்றால் அதன் மூலமாக எந்தவொரு பயன் அடைய முடியாது என்ற எண்ணத்தையே மாணவர்கள் மத்தியில் விதைக்கின்றனர். ஆகையால் சங்கீத பாடத்தைக் கற்றால் அசித்தி பெறலாம் என்பதற்காகவே மாணவர்கள் தேர்ந்தெடுத்து கற்கின்றனர். மொத்தத்தில் ஏதோ ஒரு வகையில் எப்படியாவது சங்கீதப் பாடத்தை கற்று விடலாமென்று சிந்திக்கிறார்களே தவிர அதன் உள்ளார்ந்த தன்மையை அறியாமல் அதன் தனித்துவத்தை தெரியாமலே கற்று வருகின்றனர் என்றே சொல்ல நினைக்கின்றேன். ஆயினும் மாணவர்கள் எப்படி இருந்தாலும் நான் முயற்சியெடுத்து அவர்களை ஆர்வம் கொள்ளச் செய்ததன் விளைவால் பல இசைப் போட்டிகளிலும் பங்கு பெற்று மாகாணம் மற்றும் தேசிய மட்ட இடங்களைப் பெற்று வருகின்றனர்.

**இதுவரையில் நீங்கள் பங்குபற்றிய இசை நிகழ்வுகள் குறித்து கூறுவீர்களா?**

அனேகமாக தனி கச்சேரி நிகழ்வுகளிலியே பங்குபற்றி வருகிறேன். ஒலிப்பதிவு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டுள்ளேன். திருகோணமலை, யாழ்ப்பாணத்திலுள்ள சில ஆலயங்களின் திருவிழாக்கள், விசேட வைபவங்களின் போதும், பாடசாலை மட்டங்களில் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றிலும் கச்சேரிகளை நடாத்தி வருகிறேன்.

**இசைத்துறையில் பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தி வருகிறீர்களா? ஆம் எனின் அது குறித்த விடயங்களை பகிர்ந்து கொள்வீர்களா?**

2008ஆம் ஆண்டிலிருந்து வயலின் இசை வகுப்புக்களை பிரத்தியேகமாக நடாத்தி வருகிறேன். எனது பிரத்தியேக வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் குறுகிய காலத்தில் தாம் நிகழ்ச்சி செய்யவே விரும்புகின்றனர். அதிகமாக சினிமா பாடல்கள் வாசிப்பதிலேயே ஈடுபாடு காட்டுகின்றனர். அனேகமான மாணவர்கள் சான்றிதழ்களுக்காகவே கற்கின்றனர்.

**திருகோணமலை மாவட்டத்தில் உங்களது இசை ரீதியான பங்களிப்பு எவ்வாறு உள்ளது?**

என்னால் முடிந்தளவான பங்களிப்பை எமது மாவட்டத்தில் ஆற்றி வருகிறேன். தொடர்ந்தும் ஆற்றி வருவேன்.

**இன்றைய காலகட்டத்தில் பாரம்பரிய வாத்தியக் கருவிகளுக்கான தேவை குறைந்தும், அப் பாரம்பரிய இசைக் கலைஞர்களுக்கான அடையாளமும் குறைந்து கொண்டே செல்லும் நிலையில், உங்களது பார்வையில் இது குறித்த கண்ணோட்டம் எவ்வாறு உள்ளது?**

ஆம் மிகவும் உண்மையான விடயம். இன்றைய சூழலில் பாரம்பரிய வாத்தியங்களுக்கான தேவை மிக மிகக் குறைவாகவே உள்ளது. நவீன தொழில்நுட்பத்தின் வசதியினால் பாரம்பரிய இசைக்கருவிகளுக்கு பதிலாக அவ் இசையினை இணைய தளத்தின் உதவியுடன் பெறக் கூடியதாக உள்ளதாலும், ஒலிப்பதிவு செய்யக்கூடிய வசதிகளும் வளர்ச்சி அடைந்துள்ளதால் பாரம்பரிய வாத்தியக் கருவிகளின் தேவை குறைந்ததன் விளைவோடு அப் பாரம்பரிய கலைஞர்களுக்கான அடையாளமும் குறைந்து கொண்டே செல்கின்றது என்பது வேதனைக்குரிய விடயமே!

**கலை மன்றங்கள், சமூக மட்டத்திலான அமைப்புகள் சார்ந்த பணிகளில் உள்ளீர்களா?**

ஆம். திருகோணமலை இசை நர்தன கலைஞர் ஒன்றியத்தில் உள்ளேன்.

**வயலின் இசைக் கலைஞராக நீங்கள் கைக் கொள்ளும் உத்திகள் குறித்தும், புதுப் புது உத்திகளையும் காலத்தின் தேவைக்கேற்ப வளர்த்துக் கொள்ள முடிகின்றதா?**

ஆம். காலத்தின் தேவைக்கேற்ப நாமும் புதுப் புது உத்திகளை கற்றுக் கொள்ள வேண்டிய அமைப்பு காணப்படுகிறது. அதனால் இணைய தளங்கள் ஊடாக பல விடயங்களைக் கற்பதன் வாயிலாக புதிய விடயங்களை கற்பிக்கக் கூடியதாகவுள்ளது.

**இசைக் கலைஞராக இத்துறையில் ஏதேனும் மன ஆதங்கம் உள்ளதா?**




ஆம். இசைத்துறையில் நடைபெறும் பரீட்சைகளில் பரீட்சகராக இருப்பவர்களில் சிலர் மாணவர்கள் மீது பரிதாபம் காட்டுவதாக எண்ணி புள்ளிகளைக் கூடுதலாக வழங்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இதனால் திறமையான மாணவர்கள் உருவாவது தடைப்படுகின்றது. உதாரணமாக க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இசைக்கருவிகளும் பயில வேண்டுமென்ற கட்டாயம் கொண்டு வந்த போது மாணவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட பாடத்திட்டங்கள் முழுவதையும் கற்று ஒப்புவித்தார்கள். ஆனால் இன்றைய சூழலில் பரீட்சகர்கள் மாணவர்கள் பாவம் சித்தி பெற வேண்டுமென்பதற்காக அந்த பாடத்திட்டத்தில் ஆரம்பப் பகுதியை மட்டும் கேட்டுவிட்டு புள்ளிகளை வழங்கும் சந்தர்ப்பத்தினால் மாணவர்கள் தற்போது ஒரு சில பாடப் பகுதியை மட்டும் கற்றால் போதுமென்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால் இசைக் கருவியை பயன்படுத்தும் சந்தர்ப்பம் குறைவாகி விட்ட நிலைக்கு போய்விட்டது.

**உங்களது இசைப்பயணம் அடுத்த பரம்பரைக்கு கொண்டு செல்லப்படுகிறதா?**

அடுத்த பரம்பரைக்கு கொண்டு செல்ல வேண்டுமென்ற விருப்பம் அதிகமாகவே உள்ளது. எனக்கு 2பெண் பிள்ளைகள். எனது முதல் பெண் பிள்ளையை பாடகியாக கொண்டு வர வேண்டுமென்றே விரும்பினேன். ஆனால் அவர் அதில் விருப்பம் காட்டவில்லை. மருத்துவத் துறைக்குச் சென்று பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவியாக உள்ளார். இருந்தபோதும் வயலின் நன்றாக வாசிப்பார். எனது 2வது பெண் பிள்ளை தரம்7இல் கற்கின்றார். அவரையாவது இசைத் துறையில் கொண்டு வர வேண்டுமென்று முயற்சியெடுக்கிறேன். எனது அக்காவின் மகள் தற்போது இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இறுதியாண்டில் கற்று வருகிறார். அவரும் பிரதான பாடமாக வயலினையே தெரிவு செய்து கற்று வருகிறார்.

**இசைத் துறையில் பெற்ற விருதுகள் குறித்து கூறுவீர்களா?**

மிகப் பெரும் விருதுகள் என்று இதுவரையில் எதுவும் பெறவில்லை.

**14) நிறைவாக, இளம் கலைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

இசையானது சகல ஜீவராசிகளையும் மகிழ்விக்க வல்லது. இசையின் பெருமையை நம் நாட்டு இளைஞர்கள் அறிந்து, புரிந்து கொள்ள வேண்டும். இசையின் அடிப்படையிலிருந்து முறையாகக் கற்று மற்றும் இசைக் கருவிகளையும் முறையாகப் பயிற்சி செய்து தேர்ச்சியடைய வேண்டும். வேற்று மொழி இசை வந்து வேரூன்றாமல் இருக்க அனைத்து இசைக் கலைஞர்களும் ஒத்துழைத்து ஊக்கமெடுக்க வேண்டும். இதனை பின்பற்றி வந்தால் நம் கலைஞர்களும் சிறந்த கலைஞர்களாக மிளிர்வார்கள். அந்த வகையில், கலைஞர்களை வெளிக்கொண்டு வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

மனிதனும், இறைவனும் இணையும் ஊடகமாக இசை உள்ளது. அவ்வாறான இசை மனதை மகிழ்வித்து ஒருநிலைப்படுத்துவதோடு வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும் துணையாக உள்ளது. அந்த இசையினை கற்க விரும்பும் மாணவர்கள் தங்களது சுய விருப்பத்தில் ஆர்வம் கொண்டு முறைப்படி கற்குமிடத்து அவர்களது எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதோடு மாணவர்கள் மத்தியில் அன்பும், பணிவும், பக்குவமும் நிலைப் பெறும் என்பது எனது கருத்து.

இவ்வாறாக வயலின் இசை மூலமாக திருகோணமலை மாவட்டத்திற்கு பெருமையைத் தேடித் தந்த இக் கலைஞர் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என பிரார்த்தித்துக் கொண்டு கலைஞரை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

நன்றி!

**தொடரும்.......**

**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்.**

# கவிதையே உயிர் மூச்சாகிய புதுவை இரத்தினதுரை:

# எக்காலத்திலும் எங்களுக்கான குரல்!

# விடுதலை வீரத்தின் வீரியக் குரல்!

**( ஈழ விடுதலைக்காக ஒவ்வொரு தமிழனிடமும் கவிதை மூலமாக உணர்வூட்டினார் புதுவை இரத்தினதுரை. மனித நேயமுள்ள உலகத்து மனிதர்களிடம் உரத்து கூவினார். நெஞ்சு வெடித்து இனத்துக்காகக் கதறிய புதுவை போர் மௌனித்த 2009 மே19 பின்னர் காணாமல் ஆக்கப்பட்டார். எங்கள் மக்களுக்காக ஓங்கி ஒலித்த இந்த கவிஞனுக்கு என்ன சொல்ல போகிறது இந்த உலகம் ? டிசம்பர் 3ம் திகதி ஈழப் பெருங்கவி புதுவை இரத்தினதுரையின் பிறந்த நாளையோட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.)**

புதுவை இரத்தினதுரையின் படைப்பிலக்கியம் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு உந்துசக்தியாக இருந்ததை மறுதலிக்க முடியாது. சுதந்திர கவிதை உலகில் போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அவரைச் சாரும்.

உண்மையில் விடுதலைப்போரின் வரலாற்றுடன் சேர்ந்து அவரது கவிதைகளும் சமாந்திரமாகவே பயணித்துள்ளன எனலாம்.

கனதியான கவிதை வீச்சும், உயிர் மூச்சுமான அவரது படைப்புக்களுக்கு ஈழ விடுதலைப்போரில் தனியானதோர் இடமுண்டு. ஈழ விடுதலைப் போராடடம் போரியலில் முனைப்புப்பெற்ற 1987க்கு முந்திய காலத்தில் அவரது கவிதைகள் ஒரு தேசம் என்ற கருத்தின் வலிமையை உரைத்தன. அவையே எம் தேசியத்து எழுச்சியின் நம்பிக்கையை எடுத்துக் கூறின.

## விடுதலைப் போர்க்கவி புதுவை :

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் விடுதலைக்காக கவிஞர் புதுவை இரத்தினதுரை, போராட்டத்தில் பங்கேற்று புரட்சிப் பாக்களை எழுதி இளைஞர்களை எழுச்சி கொள்ள செய்தவர். கவிஞர் புதுவையின் ஆழ வரிகளை ஒரு முறை உணர்ந்து பார்த்தோமானால்


இழந்து போனவனுக்கு
வாழ்க்கை துயரம்
எழுந்து நடப்பவனுக்கு
எல்லாமே மதுரம்
துயரம் அழுவதற்காக
அல்ல எழுவதற்காக
எனத் தைரியம் மேலோங்கும்.


## புத்தூரில் மலர்ந்த புதுவை :

புதுவை இரத்தினதுரை என அழைக்கப்படும் வரதலிங்கம் இரத்தினதுரை புத்தூரில் 1948 திசம்பர் 3 பிறந்தார். ஈழத்துக் கவிஞரும், பாடலாசிரியரும், சிற்பக் கலைஞரும் ஆவார். ஏராளமான தமிழ்த் தேசியப் புரட்சிப் பாடல்களை எழுதியுள்ளார்.

14வது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கிய இவர் வியாசன், மாலிகா என்ற புனைபெயர்களிலும் பல கவிதைகள் எழுதியுள்ளார். இவர் எழுதிய இந்த மண் எங்களின் சொந்த மண் பலரது வரவேற்பையும் பெற்ற உணர்வுபூர்வமான பாடல் ஆகும்.

புதுவை இரத்தினதுரை எழுதிய



வானம் சிவக்கிறது (1970), இரத்த புஷ்பங்கள்(1980), ஒரு தோழனின் காதற் கடிதம், நினைவழியா நாட்கள் , உலைக்களம் , பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் ஆகியன வெளிவந்த கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

## களத்தில் நின்ற கவிஞர் :

ஒரு படைப்பாளி தன் சொந்த அனுபவங்களில் உயிர் வாழ்கிறான். படைப்பாளியின் சுயானுபவம் அதில் தங்கியிருக்கிற போது படைப்பு உயிர்ப்போடு நிற்கும். ஒவ்வொரு படைப்பாளிக்கும் அவரவர் வாழ்வியல் சார்ந்து அனுபவம் ஒவ்வொரு வகையாய் அமையும். அவ்வாறே புதுவையின் வரிகளில்.

வெடிக்கும் எதிரிகணைகள்
ஒவ்வொன்றுக்கும்.
விரல்மடித்துக் கணக்கெடுத்தபடி
இருந்தேன்
இடையிற் கண்ணயர்ந்து
போனேன்
விழிப்புற்ற போதும்
வந்து வெடித்தன
குண்டுகள்.
மீண்டும் எண்ணத்
தொடங்கினேன்
இடையிற் சிரிப்பு வந்தது,
சிரித்தேன்.
விளையாட்டாகிவிட்டது
யுத்தம்..
அப்பாடா விடிந்து
வருகிறது.
இரவு எத்தனை
குண்டுகள்
என்றாள் மனைவி..
எழுந்தமானத்தில்
எழுபது என்றேன்
நேற்று என்பது
ஏன் பத்துக் குறைந்தது
என்றாள்,,
நெடுங்கேணியில்தான்
நிற்கிறான் கேட்டுப் பார்
கேட்காமலா விடுவோம்?

என களத்தில் உணர்வோடு நின்ற கவிஞர் அவர். கவிதை எழுத ஆரம்பித்தது தொட்டு இன்று வரை. அவரது பாடு பொருளில் பெருமளவு மாற்றமில்லை. மானுடம் எங்கு வதைபடுகிறதோ, அங்கெல்லாம் அவர்களுடைய மொழியில் அவரது கவிதை பேசும்.

வதைபடுதல் ஒவ்வொரு இடத்தும் ஒவ்வொரு வகையாக வெளிப்படும் என்பது தவிர வேறொன்றுமில்லை.

## விடுதலைப் பாதையில் இணைவு :

தனது பதினான்காவது வயதில் கவிதை எழுத தொடங்கி, முப்பத்தேழாவது வயதில் விடுதலைப் பாதையில் தன்னை இணைத்துக் கொண்டு தீவிரமாக செயல்பட்டவர். போரியல் வாழ்க்கையின் மீதான அதி உன்னதமான நம்பிக்கைகளையும், அழகியலையும் தரும் உக்கிரமான கவிதைகளை எழுதிய கவிஞர் புதுவை இரத்தினதுரை

அட மானுடனே!
தாயகத்தைக் காதலிக்கக்
கற்றுக்கொள்
பெற்ற தாய் சுமந்தது
பத்து மாதம்
நிலம் சுமப்பதோ
நீண்ட காலம்
அன்னை மடியில்
இருந்து கீழிறங்கி
அடுத்த அடியை
நீ வைத்தது
தாயகத்தின்
நெஞ்சில்தானே.
இறுதியில் புதைந்தோ
அல்லது எரிந்தோ
எருவாவதும்
தாய்நிலத்தின்
மடியில்தானே,
நிலமிழந்து போனால்
பலமிழந்து போகும்
பலமிழந்து போனால்
இனம் அழிந்து போகும்..,
ஆதலால் மானுடனே!
தாய்நிலத்தைக்
காதலிக்கக் கற்றுக் கொள்

இத்தகைய மகத்தான சொற்களை வடித்து உணர்ச்சிகர கவிதையாக எழுதியவர் புதுவை.

நீண்ட விடுதலைப் பயணத்தில் கடந்து வந்த பாதையின் வீரமும், சோகமும், கோபமும், மகிழ்ச்சியும், பெருமிதமுமென மாறி மாறிய உணர்வுகளைக் கொண்ட காலங்களைக் கடந்து வந்துள்ளார் பெருங்கவி புதுவை.

## கடைசி வரை ஓயாத கவிஞன் :

அந்தக்கால உணர்வுகளின் குரலாக



புதுவையின் படைப்புக்கள் பதிவு பெற்றுள்ளன. புதுவை இரத்தினதுரை கவிதைகள், பாடல்கள் பற்றி எம்முள்ளே பேசப்படும் வேளைகளில் காலத்தின் குரல்கள் என்றே அவற்றை கூறலாம்.

கவிஞர் இணைத்துக் கொண்ட இல்டசிய வாழ்வும் அவரது படைப்புக்களில் சேர்ந்துள்ளது. இதனாலேயே அவரை காலத்தின் குரலாகப் பேசும் கவிஞராக ஆக்கியது எனலாம். புதுவை இரத்தினதுரையின் அற்புதமான கவி ஆற்றலும், அனாசயமான சொல் வளமும் அவரை பெரும் கவிஞர்களது வரிசையில் சேர்த்துள்ளது.

இந்த மண் எங்களின்
சொந்த மண் இதன்
எல்லைகள் மீறி
யார் வந்தவன்.
நிலைகள் தளர்ந்து
தலைகள் குனிந்து
நின்றது போதும்
தமிழா - உந்தன்
கலைகள் அழிந்து
கவலை மிகுந்து
கண்டது போதும்
தமிழா இன்னும்
உயிரை நினைத்து
உடலை சுமந்து
ஓடவா போகிறாய்
தமிழா

என நெருப்பாக தொடங்கி நீளும் ஒரு பாடல் புதுவை இரத்தினதுரை உணர்ச்சி பொங்க எழுதியுள்ளார். அந்த பாடல் வரிகள் பாரிய தாக்கத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்தியது.

வியட்நாம் போராட்டம் நிகழ்ந்த போது, ஒரு வியட்நாமியனாக அவர் கவிதை உணரச் செய்தது. சிலியில் அதிபர் ஆலண்டே கொல்லப்பட்டபோது, சிலிக் குடிமகனாக அவரது கவிதை கோபம் கொண்டெழுந்தது. 1971ஆம் ஆண்டில் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட போது, அவர்களுடன் சேர்ந்து அவரது கவிதை அழுதது. யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிப்புப் போராட்டம் நடைபெற்ற போது, அந்தப் போராட்ட சக்திகளோடு இணைந்து அவருடைய குரல் ஒலித்தது. இப்படி களமாடுவதிலும், கவிதையாடுவதிலும் புதுவை கடைசி வரை ஓயவில்லை.

## தமிழ் இனத்தின் குரல் :

தமிழ் இனத்தின் சார்பாக புதுவையின் குரல் எப்போதும் கேட்டது. அவருடைய காலக் கவிதைகள் எப்போதும் சூடு தணியாமல் உணர்வை வைத்திருந்தன. இக்கவிஞன் கூறியது போல இந்தப் போராட்டத்துக்கு என்னை ஒப்புக் கொடுத்திருக்கின்றேன். இந்தப் பணி முற்றுப் பெறும் போது, வேறு எங்கு வரை துயரக்குரல் கேட்கிறதோ, என்னுடைய கவிதைகளுமாக நான் அங்கு போய்ச் சேருவேன் என வியாசிக்கின்றார்.

ஊர் பிரிந்தோம்
ஏதும் எடுக்கவில்லை
அகப்பட்ட
கொஞ்சம் அரிசி,
பருப்பு, இரண்டு பாய்,
இருமல் மருந்து,
மனைவியின்
மாற்றுடுப்பு மூன்று,
காற்றுப் போய்க்கிடந்த
மிதிவண்டி,
காணியுறுதி,
அடையாள அட்டை
அவ்வளவே,
புறப்பட்டு விட்டோம்.
இப்போ உணருகிறேன்
உலகில் தாளாத
துயரெது?
ஊரிழந்து போதல் தான்.

இந்த கொடூர நிலை அரை நூற்றாண்டாக எங்கள் ஈழமண்ணில் தொடர்ந்தது.

## மானுட விடுதலை வேண்டி :

தமிழ் இன விடுதலை வேண்டியும்,
அதி உச்ச எல்லையான மானுட விடுதலையை கோரிய கவிஞனை சாதாரணமான இலக்கியக் கோட்பாட்டுக்குள் சுருக்கிவிட இயலாது. ஏனெனில் புதுவை எப்போதும் களமும் கவிதையுமாய் வாழ்ந்தவர்.

போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த பெருமைக்குரியவரும் புதுவை எனலாம். எங்கள் விடுதலைப் போராட்ட வாழ்வையும், வரலாற்றையும் இலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப்படுத்தி தமிழ்த் தேசிய பிரக்ஞையை விழிப்புறச்செய்ய உழைத்தவரும் அவரே.

எங்கள் விடுதலைப்போராட்டம் எதிர்கால மாணவர்களுக்கான ஆய்வுப் பொருளாகும் காலம் வரும். அவ்வேளையில் விடுதலைப் போராட்டம் கடந்துவந்த வரலாற்றுப் பாதையின் போக்குகளையும், இந்த போருடன் வாழ்ந்த மானிடரின் மன உணர்வுகளையும் சொல்லும் ஆய்வுக்கு புதுவையின் கவிதைகளை உசாத்துணையாகும்.


இதனாலேயே இவர் எழுதிய பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் என்ற ஆன்மிகப் பாடலை கூட இலங்கை இராணுவ 2014 செப்டம்பரில் ஒலிபரப்புவதற்குத் தடை செய்து எதிர்கால வரலாற்றை மூடி மறைக்க ஆதிக்க அரசு எத்தனிக்குறது.

புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் பதுங்குகுழி வாழ்க்கைக்கும், விமானத்தின் குண்டு வீச்சுக்களும், பீரங்கிகளின் எறிகணை வீச்சுக்களும் அவரது கவிதைப் பொருளாயின. போர்க்கால படுகொலை வீச்சுக்கண்டு வெம்பி, வெடித்து கோபம் கொண்டு சாபமிட்டன புதுவை கவிதைகளும் தான். அழுதபடியே சேர்ந்துவந்தன வரிகள். ஆனால் நம்பிக்கை தளராத வரிகளுடன் விடுதலைக்கனவு குலையாத பாடல்களாய் மீள மிளிர்ந்தன.

பொருட்தடை, மருந்துத்தடை, போக்குவரத்துத்தடையென எல்லாத் தடையினுள்ளும் கிடந்தழுந்திய எம்மக்களுடன் சேர்ந்திருந்தன துயரத்தை கூறியதும் புதுவையின் கவிதைகள்.

வன்னியினுள்ளே நடந்தேறிய விடுதலை தியாக வேள்வியில் சேர்ந்தொலித்தன அவரது பாடல்களும் தான்.

சும்மா காற்றில் பற்றியா
இந்தத் தீ மூண்டது?
இந்த அனல் பிடித்தெரிய
எத்தனை காலம் பிடித்தது
எத்தனை பேரைத் தீய்த்து




இந்த தீ வளர்த்தோம்
எத்தனை பேரை நெய்யாக
வார்த்தோம்..,,
அணைய விடக்கூடாது
ஊதிக்கொண்டேயிரு
பற்றியெரியப் போகுதெனப்
பதறுவர்
ஊதுவதை நிறுத்தி விடாதே.
இந்தத் தீயின்
சுவாலையிற்தான்
மண் தின்னிகள் மரணிக்கும்..

இத்தகைய கவிப்படைப்பின் மூலம் ஈழத் தமிழ்மக்களை போராட்ட களத்திற்கு செல்ல வழியமைத்தவர் புதுவை இரத்தினதுரை.

## களத்தில் மலர்ந்தவை பாடல்கள் :

இராணுவ ஆக்கிரமிப்புக்கு காலத்தில் அவரது பாடல்கள் காடுகளின் கரந்துறை விடுதலை வாழ்வியலுடன் பயணித்தன. அப்போது 1989இல் வெளிவந்த ஒலிநாடாவான 'களத்தில் மலர்ந்தவை' ஈழமெங்கும் எட்டுத் திசையிலும் ஒலித்த பாடல்களாகும். அத்தோடை புதுவை எழுதிய பாடல்களில் இந்த மண் எங்களின் சொந்த மண், வேர்கள் வெளியினில் தெரிவதில்லை, காவலரண் மீது காவலிருக்கின்ற ஆசை மகளே, பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே, காலநதி ஓடுகின்ற கரையில் வீசும் காற்று, தீயினில் எரியாத தீபங்களே,

சங்கு முழங்கடா தமிழா என்றும் தமிழர் மனங்களில் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

ஈழ விடுதலைக்காக ஒவ்வொரு தமிழனிடமும் கவிதை மூலமாக உணர்வூட்டினார் புதுவை இரத்தினதுரை. மனித நேயமுள்ள உலகத்து மனிதர்களிடம் உரத்து கூவினார். நெஞ்சு வெடித்து இனத்துக்காகக் கதறிய புதுவையை போர் மௌனித்த 2009 மே19 பின்னர் காணாமல் ஆக்கப்பட்டார். எங்கள் மக்களுக்காக ஓங்கி ஒலித்த இந்த கவிஞனுக்கு என்ன சொல்ல போகிறது இந்த உலகம் ?

மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கும், அவர்களின் விடுதலைக்குமாக, பயணித்து, சர்வ தேசியம். கவிதைப் பயணம் மூலமாக மட்டுமல்ல, களப்பணியாலும் வளப்படுத்திய பாப்லோ நெருடா, நசீம் இக்மத், வால்ட் விட்மன், பாலஸ்தீனக் கவிஞன் மக்மூத் தார்வீஷ், கருப்பினக் கவிஞன் லாஸ்டன் ஹ்யூஸ் இவர்களின் திசைவழியில் புதுவை இரட்ணதுரையும் பயணிக்கிறார் என்றால் மிகையாகாது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# கல்முனை சாஹிராவில் 9ஏ சித்தி பெற்ற மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு





(ஏ.எஸ்.மௌலானா, யூ.கே.காலிதீன்)

இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் 9ஏ சித்திகளைப் பெற்றுக் கொண்ட 23 மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (04) நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது- மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் தலைவரும் தொழிலதிபருமான எம்.எஸ்.எம். முபாறக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சாதனை படைத்த இம்மாணவர்களுக்கு பணப் பரிசில்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கல்லூரியின் அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் டாக்டர் சனுஸ் காரியப்பர் உட்பட நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாணவ சங்கத்தின் உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

இச்சாதனையானது கல்முனை கல்வி மாவட்டத்தில் ஒரு பாடசாலை பெற்ற அதி சிறந்த பெறுபேறு என்பதோடு இலங்கையிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் கல்முனை சாஹிராவானது தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது என்று கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜாபீர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு பாராட்டு

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் நிதிப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களான ஏ.எம்.எம். றியாஜத் மற்றும் எம்.எஸ்.நஜீம் ஆகியோரின் பிள்ளைகள் இம்முறை தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (04) மாலை நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை நிதிப் பிரிவின் ஏற்பாட்டில் கணக்காளர் கே.எம்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜெளஸி ஆகியோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது முஹம்மட் றியாஜத் அறைஸ் அம்ஹர் மற்றும் நஜீம் முஹம்மட் நுபையில் நகீ ஆகியோர் நினைவுச் சின்னம், பரிசுப் பொதி மற்றும் பணப் பரிசு என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வரவர்மண், நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஏ.பாஸித், நிதி உதவியாளர் திருமதி எஸ். யோகராஜா, சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக் உட்பட நிதிப் பிரிவு உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் கல்வித்துறை சாதனைகளுக்காக மாநகர சபையின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளை பொதுவான விழாவொன்றில் பாராட்டி கௌரவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி இதன்போது தெரிவித்தார்.

# அரச பேருந்துகள் பணி பகிஷ்கரிப்பு





(தலவாக்கலை பி.கேதீஸ்)

தனியார் பஸ் ஊழியர்கள் குழுவொன்று தனது ஊழியர்கள் மூவரை தாக்கியதாக நுவரெலியா இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்று (04) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்று முன் தினம் (03) மாலை இராகலை பிரதேசத்தில் மூன்று இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கும் தனியார் பஸ் ஊழியர்கள் குழுவிற்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதுடன், மூன்று இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி நுவரெலியா இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் அனைவரும் தமது கடமைகளை விட்டு விலகி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நுவரெலியா இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளர் உதயசிறி பண்டார, தனியார் பஸ் ஊழியர்கள் குழுவினால் தனது ஊழியர்கள் மூவர் தாக்கப்பட்டதாகவும் அவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து காவல்துறை உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னரே மாலையில் பேருந்துகளை இயக்க முடியும் என நம்புவதாகவும் பண்டார தெரிவித்தார். இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபையினர் வேலை நிறுத்தம் காரணமாக அரசாங்க மற்றும் தனியார் அலுவலக ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய பயணிகள் போக்குவரத்து வசதிகளை பெற முடியாமல் கடும் சிரமத்திற்குள்ளாகினர். இது தொடர்பில் இராகலை மற்றும் நுவரெலியா பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# நிலைபேறான அபிவிருத்தி முன்வைப்பில் கிழக்கு மாகாண மட்டத்தில் கல்முனை கார்மேல் பற்றிமா சாதனை!



( வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் கிழக்கு மாகாண இரு மொழிக் கல்வி பாடசாலைகளிடையே தரம் 6-9 வரையான வகுப்பு மாணவரிடையே நடத்தப்பட்ட நிறைபேறான அபிவிருத்தி தொடர்பான முன்வைப்பு (presentation) மாகாண மட்ட போட்டியில் கல்முனை கார்மேல் பற்றமா கல்லூரி இரண்டாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகி சாதனை படைத்துள்ளது.

இம் மாகாண மட்ட போட்டி மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் உயர்தர பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவர்கள் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் ஊகுஇ வழிகாட்டலில், இம் முன்வைப்பு போட்டியில் சிறப்பான முன்வைப்பு களை முன்வைத்தனர்.

தரம் 6 சார்பாக ரி. மிருஷானன், தரம் ஏழு சார்பாக சு.தவேஸ்ஹர், தரம் எட்டு சார்பாக கே பீஷ்மன் , ஏ எஸ் முகமது சுலைம் , தரம் ஒன்பது சார்பாக ஹியூமன் றொட்கர் ஆகிய மாணவர்கள் பங்கு பற்றினர்.

கிழக்கு மாகாண மட்ட போட்டியில் முதல் இடத்தை மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியும் இரண்டாம் இடத்தை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியும் மூன்றாம் இடத்தை மட்டக்களப்பு சிசிலியா மகளிர் பாடசாலையும் பெற்றுக் கொண்டது.

கல்முனை மாவட்டமட்ட போட்டியிலே கல்முனை கார்மேல் பற்றிமா அணி முதல் இடத்தை பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவாக இருந்தமை தெரிந்ததே.

தேசிய மட்ட போட்டி நாளை ஆறாம் தேதி கொழும்பில் செல்வத்தை பத்தரமுல்லயில் நடைபெறும். இலங்கையின் ஒன்பது மாகாணங்களும் இதில் பங்கேற்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆய்வரங்கம்..!







(அ . அச்சுதன்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித்துறையுடன் இணைந்து நடாத்தும் ஆய்வரங்கம் தென்கிழக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (02) இடம்பெற்றது.

'இரண்டாயிரம் ஆண்டுக்கு பின்னரான கிழக்கிலங்கையின் இலக்கிய செல்நெறி' எனும் தலைப்பின் கீழ் இவ் ஆய்வரங்கு இடம்பெற்றது.

இவ் ஆய்வரங்கில் திறனாய்வுத் துறையின் செல்நெறி ,கவிதை துறையின் செல்நெறி ,நாவல்துறையின் செல்நெறி ,மொழி பெயர்ப்புத்துறையின் செல்நெறி ,சிறுகதைத் துறையின் செல்நெறி ,பெண் எழுத்துக்களின் செல்நெறி, இலக்கியத்தில் நவீன தொழில்நுட்பத்தின் செல்வாக்கு, ஆய்வு பகிர்வின் நோக்கு உள்ளிட்ட தலைப்புக்களில் இவ் ஆய்வரங்கு இடம்பெற்றது.

இவ் ஆய்வரங்கமானது வாழ்நாட் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இதில் கிழக்கு மாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள், கவிதாயினிகள் பங்குபற்றியிருந்தனர். இந்நிகழ்வில் அதிதிகளாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், தென்கிழக்கு பல்கலைக்கழக கலைகலாச்சார பீட பீடாதிபதி எம்.எம்.பாஸில் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

# வெருகலில் மனித உரிமைகள் தினம் அனுஷ்டிப்பு..!

(அ. அச்சுதன்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு AHRC நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை, வெருகல் பிரதேச சிவில் அமைப்புகளினால் (04) திங்கட்கிழமை வட்டவன் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது வெருகல் பகுதியில் மீறப்பட்டு வருகின்ற மனித உரிமைகள் தொடர்பாக மக்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக தமது பிரதேசத்தின் மணல் வளம் சுரண்டப்படுகின்றமை, காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளமை, பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழியில் முறைப்பாடுகளை பெறுவதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுகின்றமை உட்பட பல மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களை தெரிவித்ததோடு அது தொடர்பான மகஜர் ஒன்றினை மனித உரிமைகள் தினத்தன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு வின்சென்ட் உயர்தர தேசிய பாடசாலையில் 56 மாணவிகளுக்கு 9ஏ சித்திகள்!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை முடிவுகளின் படி மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் 56 மாணவிகள் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

குறித்த பாடசாலையிலிருந்து 176 பேர் இம்முறை பரீட்சைக்கு தோற்றியிருந்ததாக கல்லூரியின் அதிபர் திருமதி தவத்திருமகள் உதயகுமார் தெரிவித்தார். 20 மாத்விகள் 8 ஏ சித்திகளையும் 17 மாணவிகள் 7 ஏ சித்திகளையும் பெற்றுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடம் வெளியான சாதாரண தர பரீட்சை முடிவுகளின் படி இப்பாடசாலையிலிருந்து 46 மாணவிகள் ஏ சித்தி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# மூதூரில் பழக்குடி மக்களின் அடிப்படை வசதிகளுக்கு கூட தீர்வில்லை

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

இலங்கை நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்ற போதும் இன மதம் மொழியால் வேறுபட்டாலும் பழங்குடி என்ற மக்களும் வாழ்கின்றார்கள் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராமமே சந்தனவெட்டை கிராமம் இக் கிராமத்தில் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் மூதூர் நகரில் இருந்து தொலைவில் அமையப் பெற்ற இக் கிராம மக்கள் பல்வேறு பின்னடைவுகளுடன் வாழ்ந்து வருகின்றார்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமைகளாக காணப்படுகின்ற மனித அரசியல் சிவில் உரிமைகள் போன்றன இவர்களுக்கும் கிடைக்கப் பெறுவது அரிதாகவே காணப்படுகிறது. இது தொடர்பான நிலையை கருத்திற் கொண்டு விழுது ஆற்றல் மையத்தின் ஏற்பாட்டில் ஓரங்கட்டப்பட்ட சமூகத்திற்கான ''இளையோரின் குரல் ''என்ற தொனிப்பொருளின் கீழ் நடமாடும் சேவையொன்று 21.11.2023 ந் திகதியன்று குறித்த கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடத்தில் இடம் பெற்றது.

பழங்குடி மக்களது ஜீவனோபாயமானது மிகவும் பின்னடைந்துள்ள நிலையில் சமூகமயமாக்கப்படாமை அம் மக்கள் அதற்குள் செய்வதறியாது தடுமாறுகின்றனர். அரச சேவையை பெறுவது முதல் பல இன்னோரன்ன சட்ட ரீதியான ஆவணங்களை பெற முடியாது வாழ்கின்றார்கள். இது தவிர பல விழிப்புணர்வற்ற நிலை காரணமாக பல்வேறு சமூகப் பிரச்சினைகளும் அங்கு இருந்து வருகின்றது. பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்பின்மை ,கல்வி,மந்தபோசனை,பால் நிலை சார்ந்த பல பிரச்சினைகளை தீர்க்கவும் சேவை வழங்குனர்களையும் வசதிப்படுத்தக்கூடிய வளங்களை இணைப்பு செய்ய கூடியதூமாக குறித்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது. அன்றைய நடமாடும் சேவையில் சம்பூர் பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவு உத்தியோகத்தர்கள், மூதூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக பதிவாளர் கிளை மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள் மதஸ்தல உறுப்பினர்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள் என பலரது ஒத்துழைப்புக்களோடு இடம் பெற்றதோடு பிறப்பு ,அடையாள அட்டை விவாக பதிவு போன்றன அம் மக்களுக்கான சேவைகளாக திறம்பட இடம் பெற்றது.

ஆரம்ப கட்டமாக பிள்ளையின் பிறப்பு முதல் பிறப்பு சான்றிதழ் கூட பலருக்கு இல்லாத நிலை இங்கு காணப்படுகிறது இளவயது திருமணம் அதிகரித்தும் காணப்படுகிறது இது போன்ற விழிம்பு நிலை மக்களின் துயர் துடைக்க பழங்குடி என்கின்ற மக்கள் என்பதை ஒதுக்காது சேவைகளை வலுப்பெறச் செய்ய வேண்டும் என்பதே அம் மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார சீர்கேடு உட்பட ஆரோக்கியமான வாழ்வு தொடர்பான விழிப்புணர்வும் இதன் போது இடம் பெற்றதுடன் குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி பிரவீனா அவர்களால் இளவயது திருமணம்,இளவயதில் கர்ப்பம் தவிர்த்தல், மந்த போசாக்கு போன்ற பல விடயங்களை அணுகுவதற்கு தங்களது களவிஜயத்தின் போது பெற்றார்கள் தங்களை அணுகுவதும் குறைவாக காணப்படுவதாகவும் தெரிவித்தார். இது தவிர பாடசாலை இடைவிலகல் போன்றனவும் கல்வியில் பல பின்னடைவுகளை ஏற்படுத்துகிறது. பல தரப்பட்டவர்களுக்கான பிறப்பு சான்றிதழ் அற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் இவ்வாறான நிலை இனிமேலும் இருக்கதக்கவாறான சேவை அம் மக்களுக்கு கிடைக்க வேண்டும் ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமை அம் மக்களுக்கும் கிடைக்க வழிசெய்ய வேண்டும் இதற்காக துறைசார் அரச நிறுவனங்கள் முன்வர வேண்டும். இக் கிராம மக்களின் உட்கட்டமைப்பு வசதிகள் தொடக்கம் பல வீதிகள் உட்பட அபிவிருத்திகளிலும் புறக்கணிப்பு செய்யப்படுவதாக அம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.









ஏனைய சமூகத்துடனான உறவாடல் இன்றிய நிலையில் பழங்குடி என்ற நிலைக்குள் வாழ்க்கை நடாத்தினாலும் இம் மக்களின் சகல உரிமைகளும் சுதந்திரங்களுடனும் வாழ வைக்க வேண்டும். பல்வேறுபட்ட இக் கட்டான சூழ் நிலை இம் மக்களை பெரிதும் பாதித்துள்ளது நாட்டில் ஏற்பட்ட அண்மைய பொருளாதார நெருக்கடி உட்பட தற்போது வரை பல கஷ்டங்களுடன் இம் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ‘பல வருட காலமாக அடையாள அட்டை இன்றி காணப்பட்ட நான் தற்போது இந்த நடமாடும் சேவை மூலமாக விண்ணப்பித்துள்ளேன் இதன் மூலம் அடையாள அட்டை கிடைக்கும் என நம்புகிறேன் இது தொடர்பில் முன்னர் எப்படி பெறுவது என்று தெரியாமலும் இருந்தது எனவே இந்த விழுது நிறுவனத்துக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்’ என நடமாடும் சேவையின் மூலம் பயனடைந்த குறித்த கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

வளங்களை இணைப்புச் செய்வதன் மூலமும் மக்களுக்கான அரச சேவைகளை பெற்றுக் கொடுக்க முடியும் என்பதை விழுது போன்ற இளையோருக்கான குரல் எடுத்துக்காட்டியுள்ளது .மக்கள் பிரச்சினைகளை சமுதாய நிறுவனங்கள் இணைந்து கூட்டாக தீர்க்க முயற்சி எடுக்க முடியும் அது போன்ற கட்டமைப்புக்களை இக் கிராமத்தில் வலுப்படுத்த வேண்டும் கிராம அபிவிருத்தி சங்கம்,மகளிர் அபிவிருத்தி சங்கம் உட்பட பல அமைப்புக்களின் வலுவூட்டல் மூலமாக மக்களை விழிப்புணர்வுள்ளவர்களாக மாற்றியமைத்து அவர்களது உரிமைகளுக்கு செவிமடுத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

‘பலருக்கு இந்த கிராமத்தில் பிறப்புச் சான்றிதழ் இல்லை இதன் மூலமாக கிடைக்கும் என நம்புகிறேன் இது போன்று இன்னும் பல சேவைகளை இங்கு செய்ய வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறோம்’ என குறித்த கிராமத்தின் பெண்மணி அவ் நடமாடும் சேவையில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார். தங்களது தேவை கருதி மூதூர் நகருக்கு செல்வதாயின் பல கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும் என்பதுடன் சீரான போக்குவரத்து வசதியின்மையும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் சிறுபான்மை இன தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகள் சரியாக சமமாக மதிக்கப்பட்டு செயற்படக்கூடியவாறு இருக்க வேண்டும்.

இம் மக்களின் வாழ்வும் ஏனைய மக்களின் வாழ்வும் வித்தியாசமானது இது தொடர்பில் தேவை நலன் கருதி துரிதமான சேவைகளை அம் மக்கள் எதிர்பார்த்து காத்து நிற்கின்றனர்.

